# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

20-11-66

விலை 20 காசு



# கேள்வி--பதில்!

1. இந்தியப் போராட்டங்கள் பற்றி அமெரிக்க ஏடொன்று ஏதோ எழுதி இருக்கிறதாமே?

ஆமாம். இந்தியாவின் மிக மோசமான பொருளாதார நிலைமைகளை, இத்தகைய போராட்டங்களுக்குக் காரணமென்றும், முக்கியமான பிரச்சினைகளைத் தீர்க்க, ஆட்சியிலிருக்கும் தலைவர்கள், தவறிவிட்டார்கள் எனவும் 'டைம்' என்ற அமெரிக்க இதழ் கருத்தறிவித்திருக்கிறது.

2. வானொலியில் தேர்தல் பிரசாரத்துக்குக் காங்கிரஸ்தான் முட்டுக்கட்டை போடுகிறது என்பது உண்மையா?

காங்கிரஸ் கட்சி எதற்குத்தான் முட்டுக்கட்டை போடவில்லை என்கிறீர்? கதர் அணிந்து கொண்டு லட்சம் லட்சமாகவும், கோடிகோடியாவும்வாணிகத்தின் பேரால் கொள்ளையடிப்பதற்குத் தவிர, தீவிரமான முற்போக்குக் கருத்துக்கள் அத்தனைக்கும் அது எதிரிடையாகவே தான் இருக்கிறது; தன்னைத் தவிர, ஏனையோர்க்குச் சிந்திக்கத் தெரியாது என்ற எண்ணத் தடிப்பு! அது, ஆளும் கட்சி என்பதால்,—மிருகத்தனமான பெரும்பான்மை இருக்கிறதென்ற இறுமாப்பால், அது நினைப்பதனைத்தையும் செயலாக்க முனைகிறது; முடிகிறது!

3. ஆளியாறு வெள்ள விபத்தில் சிலர் "பலி"யானஇடத்தைத் தமிழக அமைச்சர் ஒருவர் பார்வையிட்டாராமே, எதற்கு?

சில கொள்ளை, கொலை வழக்குகளில் சந்தர்ப்ப, சாட்சிய சூழ்நிலைகளுக்கேற்ப, வழக்கு விசாரணை செய்யும் நீதிபதிகள், தீர்ப்பின் தெளிவு கருதி, கொள்ளை போன, அல்லது கொலை செய்யப்பட்ட இடங்களைப் பார்ப்பது உண்டு; இதேபோல் பல்வேறுபட்ட காரணங்களால் பாதிக்கப்பட்ட மக்களையும நேரில்சென்று கண்டு, அவர்களுக்கு ஆறுதல் கூறுவதும் வழக்கம். ஆனால் 'பலியான' அந்த 'இடத்தைப்' பார்த்ததில் யாருக்கு என்ன ஆறுதலோ தெரியவில்லை; என்றாலும் எதிர்காலத்தில் இத்தகைய 'பலி'கள் எதுவும் ஏற்படாதிருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவும் சென்று பார்வையிட்டிருக்கலாம்!

4. ஒரு வழக்கில், கீழ்க் கோர்ட்டில் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால், உயர்நீதிமன்றத்தில், அவருக்கு விடுதலை கிடைக்கிறதே? இது நீதியின் முரண்பாட்டைக் குறிக்கவில்லையா?

எல்லா வழக்குகளிலும் இப்படி இருப்பதில்லை—அத்துடன், நீதி மன்றங்களின் 'தீர்பபு'க்கள் பற்றி யாரும் எதுவும் விமர்சிக்கக்கூடாது என்று கூறப்படுகிறது.

5. 'உரிமைகள்' என்று வழங்கப்பெற்றுள்ளவை யாவும் 'மனிதர்'கள் யாவர்க்கும் பொது தான் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?

அரசாங்கத்தில் "ஊழியம்" செய்யும் "மனிதர்"கள் தவிர, மற்ற அனைவர்க்கும் 'பொது' என்று காங்கிரஸ் கூறுகிறது என்பதை நீங்கள் கவனித்தீர்களா?

6. 'மழை வேண்டாம்' என்று பிரார்த்தனை செய்யச் சொல்கிறாரே, அமைச்சர் ராமையா! கவனித்தீர்களா?

பலனும், பயனும் இதனால் உண்டு என்றால், நாட்டில் அமோக விளைச்சல் வேண்டும் என்று பிரார்த்திக்கலாம்; ஆண்டாண்டுக் காலம் காங்கிரசே ஆட்சியிலமர்ந்திருக்க அருள் பாலிக்க வேண்டுமென பிரார்த்திக்கலாம்! நாட்டில் முளைகண்டுள்ள கலவரங்களும், ஆர்ப்பாட்டங்களும் எழாமல், அடங்கிப் போவதுடன், நாட்டு மக்கள் குறையற்றவர்களாகவும், குறை கூறாதவர்களாகவும் இருக்க வேண்டுமென பிரார்த்திக்கலாம்! பிரார்த்தனைகளின் மூலமே அரசாங்கம் 'நடைபெற்றுக்கொண்டிருக்கக் கூடலாம்! கோடி கோடியாக ரூபாய்கள் மிச்சப்படுமே!

7. புதிய 'ஹரியாணா' மாநிலத்தில் அதற்குள் தகராறுகள் தொடங்கும் அறிகுறிகள் தென்படுகின்றதே?

'ஹரியாணா'வுடன் இணைக்கப்பட்ட சில பகுதிகளைப் பிரிக்க வேண்டுமென சாந்த் பதே சிங், கோரி, அதற்காகக் கிளர்ச்சி நடத்தப்போவதாகக் கூறி இருக்கிறார்; இதற்குப் பதிலளிக்கும் முறையில, ஹரியாணா முதல்வர் பகவத் தயாள் சர்மா, கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார் மாணவர்கள் ஏதேனும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால், கல்விக்கூடங்கள் நிரந்தரமாக மூடிவிடப் படும் என்றும் சொல்லி இருக்கிறார்! போகப் போகத்தான் புரியும் இந்த சுகஜன்னியின் விளைவுகள்!

8. ராஜினாமா செய்துவிட்டு வந்த நந்தாவுக்குக் காங்கிரஸ் தேர்தல் வேலைகளைக் கவனிக்கும் 'வேலை' கொடுக்கப்படும் என்று காமராஜர் சொல்லி இருக்கிறாரே தெரியுமா?

செய்தி உண்மையாயின், பிரதமர் இந்திராகாந்தி அவர்களுக்கு இது ஒரு புதிய தலைவலிதான்! விரிசல் விரிவடைகிறது என்று பொருள். வடக்கின் விஷமத்தனங்கள் காமராஜரை இன்னும் அதிக அளவுக்கு நெருக்கக் கூடும்.

9. பேய் மழையாலும் கொடும் புயலாலும் தஞ்சை மாவட்டத்துச் சாகுபடி பெரும்பான்மையும் பாதிக்கப்பட்டிருக்கிறதே, இந்தச் சமயத்திலாவது, நிலவரியை ரத்துச் செய்யக்கூடாதா?

தஞ்சை மாவட்டத்துச் சாகுபடி மட்டுமல்ல, தமிழகத்தின் பெரும்பான்மையான பகுதிகளிலும் அதுதான் நிலை. ஆனாலும் 'ஆரோக்கிய' அரசியல் நடாத்துபவர்கள் 1967த்தான்எதிர்பார்க்கிறார்கள்!

10. தி. மு. கழகம் இடதுசாரியா, வலதுசாரியா?

மக்கள்சாரி!

**முடியவில்லையே!**

நீங்கள் விரும்புகிறபடி பிறரை உருவாக்க முடியவில்லையே என்று புழுங்காதீர்கள்; உங்களை உருவாக்கிக் கொள்ளவே உங்களால் முடியவில்லையே!

—எ: கெம்பிஸ்

காஞ்சி

மலர் 3 20—11—66 இதழ் 17

# நவம்பர் புரட்சி!

பொதுவுடைமைத் தத்துவத்தை ஒப்புக்கொண்டு, ஆட்சியமைத்துக்கொண்டுள்ள நாடுகள் மட்டிலுமல்லாமல், உழைக்கின்ற மக்கள், உலகத்தின் எந்தப் பகுதியில் இருந்தாலும், உழைப்பின் பலனை உறிஞ்சிக் கொழுக்கும் 'உல்லாசபுரியினரின் பிடிவலுப்பட்டு, அதன் காரணமாக, உழைப்பாளிகளும், தொழிலாளர்களும் உதிரக் கொதிப்பெடுத்து, கலனை வாழ்க்கைக்குக் காரண கர்த்தர்களாயிருப்போரை எதிர்த்துப் பார்க்கத் தொடங்கியுள்ளார்களோ—

அங்கெல்லாம் இரு கிழமைகளுக்குமுன் நவம்பர் புரட்சி என்பதன் பெருமைகள் பலவாகப் பேசப்பட்டு, சிறப்புரைக்கப்பட்டு, சீரான விழாவாகவே கொண்டாடப்பட்டு வருகிறது.

1917-ம் ஆண்டு, நவம்பர் திங்கள் 7-ம் நாள் முதலாளித்துவ—பிரபுத்துவ முறைக் கொடுங்கோன்மைக்குப் பலியாகி, உரிமைக்கும், உணவுக்கும்கூட ஏங்கிக்கிடந்த ஏழைப் பாட்டாளிகள், விவசாயப் பெருங்குடியினர் ஒருமித்துக்கூடி இலட்சிய முழக்கங்களோடு, கொடுங்கோன்மையையும், எதேச்சாதிகாரத்தையும் வீழ்த்தி வெற்றி கண்டனர்!

ஏழை, எளிய மக்களது வாழ்க்கைக்கு உத்திரவாதமளித்து, உயரிய வழியைத் தேடிக்கொண்ட முயற்சிதான் நவம்பர் புரட்சி என்ற சிறப்புக்குரிய புரட்சியாகும்.

> **புரட்சியானது எந்தவொரு குறிப்பிட்ட கட்டளைகளினாலோ, நிர்பந்தங்களினாலோ, திடீரென விளைந்துவிடுவதில்லை.**
>
> **நீண்ட நெடுங்காலமாக 'அழுத்தப்பட்டும் வஞ்சிக்கப்பட்டும்' வந்த ஏழை மக்களது இரத்தச்சூடு—ஒருநாள் திடீரென செயல்படத் தொடங்கிவிடுகிறது.**
>
> **ஏமாற்றத்திற்கு இலக்கானோர், எழுச்சி பெறத் தொடங்கிவிட்டால், பூக்கின்ற மறுமலர்ச்சிக்குத்தான் புரட்சியென்ற புனிதப் பெயர் சூட்டப்படும்.**

முதலாளித்துவத்திற்குட்பட்டிருந்த ரஷ்ய மண்ணில், உழைப்பின் பலன், உழைத்தவர்க்கு உரிய அளவில் கிடைக்காமற்போன கொடுமைகள்—

விளைத்துக் கொடுத்தவை, கொடுத்தவர்க்குப் போதிய அளவு கொடுக்கப்படாமல்போன ஏமாற்றம்—

அதிகார ஆணவத்தால், ஆளப்படுவோர், சராசரி உரிமைகள் கூடக் கொடுக்கப்படாமல் பல நூற்றாண்டுக் காலம் வஞ்சித்து வதைக்கப்பட்ட ஆத்திரம்—

இவையெல்லாமாக ஒருங்குகூடி மூன்றாண்டுக் காலப் போராட்டத்துக்குப் பின்னர் கண்ட முடிவுதான் நவம்பர் புரட்சி!

இரத்தத்தையும், உயிரையும் பலிகொடுத்துத்தான் நவம்பர் புரட்சி வெற்றி சூடி இருக்கிறது.

1917-ம் ஆண்டு நவம்பர் திங்கள்—அன்று அது அனைத்துலகத்தின் கவனத்தைமட்டும் ஈர்த்துக் கொள்ளவில்லை ... அனைத்துலக நாடுகளின் முக்கிய தேவைகளையும், தேசியச் சுதந்திரத்தையும், ஜனநாயகத் தன்மையையும், சோஷலிசச் சித்தாந்த சிந்தனையையும், உலகத்தின் அமைதி வாழ்க்கைபற்றியும்கூட சிந்திக்கத் தூண்டியுள்ளது.

உலகப் புகழ்பெற்ற பல விஞ்ஞானிகளையும், எழுத்தாளர், கவிஞர்களையும் உருவாக்கித் தந்த ஜாரின் ரஷ்யநாடுதான் லெனின் என்ற மாமேதையையும் உருவாக்கியது.

அந்த மேதையின் பல்லாண்டுக்கால சிந்தனைகளும், எடுத்துக்கொண்ட திட்டமான, தெளிவான முயற்சிகளும்தான், ரஷ்ய விவசாயப் பெருங்குடியினரையும், ஏழைப் பாட்டாளி மக்களையும் ஒரு அணியின் கீழ் கொண்டுவந்து நிறுத்தியது என்றால்—லெனினது சிந்தனைச் சிறப்புதான் என்னே!

நவம்பர்புரட்சிக்காக மக்களை அறைகூவி அழைக்க லெனின் தெளிவாகத் தந்த பிரகடனத்தில் சில சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை,

> நிலப் பிரபுத்துவ முறை எத்தகைய இழப்புத்தொகையும் தரப்படாமல் ஒழிக்கப்படும்;
>
> எஸ்டேட்டுகள், பண்ணைகள், முதலானவற்றின் நில உரிமைகளையும், கோவில்கள், பொதுச் சொத்துக்கள் போன்றவற்றின் உடைமைகளையும் அரசு ஏற்கும்.

என்பன போன்ற சிலவாகும். இத்தகைய தீவிரமான திட்டங்களின் அடிப்படையிலே அமைந்த நவம்பர் புரட்சி, கொடுங்கோன்மைக்கு முடிவு கட்டி-புதுமைகள் பொலிவு பெறச் செய்ததில் வியப்பேதுமில்லை.

இப்புரட்சிப் பிரகடனத்தை மையமாய்க்கொண்டு வெற்றி கண்ட பல காலனி ஆதிக்க நாடுகள் இன்று தலைநிமிர்ந்து நிற்கிற நிலையில் இருப்பது புரட்சியின் பெருமை கூறும் ஒன்றல்லவோ!

உரிமை பெறவும், கொடுங்கோன்மையை எதிர்க்கவும், எதேச்சாதிகாரத்தை வீழ்த்தவும் மூன்றாண்டுக் காலத்துக்கு மேல் 'கால கெடு' எடுத்துக்கொண்டு பெற்ற வெற்றிச் சிறப்பன்றோ, நவம்பர் புரட்சி!

இன்றைக்குச் சுமார் 50 ஆண்டுக் காலத்துக்கு முன்னர், உலகத்தின் பெரும்பான்மையான நாடுகளின்

நிலையென்ன? நெறியென்ன? இந்நாடுகளின் சிந்தனையைத் தாண்டிவிட்டு, புரட்சி வெற்றி நல்கி 50 ஆண்டுக் காலம் கடந்துவிட்டாலும்,

அப்போதைய அதன் தேவையும், வெற்றிச் சிறப்பும் வரையறைக்கு உட்பட்டதாக இருக்க முடியாது. காரணம்,

வதைபடும் மக்கள் வாழ்வுபெற வேண்டுவதும்,

உரிமை இழந்த மக்கள் உரிமை பெற்றுயர்வதும்,

அடிமை யுணர்வு அகலப் பெற்று, சுதந்திர-மோகம் கொள்வதும்

தவறென்றுரைப்போர் இந்த இருபதாம் நூற்றாண்டின் முதுமைப் பருவத்தில் யாருமில்லை! அதனால்!!

எனவே, உலகப் பாட்டாளி மக்கள் அத்துணைப் பேரையும், உலகையே உலுக்கிய ஒரு வாழ்க்கை உத்திரவாதத்திற்குத் துணையாய், தாணுப்த்தோன்றிய நவம்பர் புரட்சியையும், அதன் இலட்சியத்தையும், நாம் மன்தார-வாழ்த்துகிறோம்.

எதேச்சாதிகார வெறித்தனத்துக்கு அறிந்தோ, அறியாமலோ தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள ஏகாதிபத்தியவாதிகள் எங்கிருந்தாலும் சரி, அவர்களது-காத்தக் குருட்டுத்தனத்துக்கு ரஷ்ய நாட்டின் நவம்பர் புரட்சி ஒரு பாடம் புகட்டும் என்பதிலும் ஐயமில்லை: என்ற நம்பிக்கையோடு அதன் சிறப்பைப் போற்றுகிறோம்!

❁

# நாட்டாட்சி மாறட்டும்!

இந்தியத் தலைநகரில் நடைபெற்ற 'சாதுக்களின்' 'சர்வபரித்தியாக' லீலா விநோதங்களுக்குப் பின்னர் மக்களவையில் எழுந்த பெரும் புயலையடுத்து — நந்தாவின் பதவி விலகல் ஒப்புக்கொள்ளப்பட்டு, மத்திய அமைச்சரவையிலும் சில மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன.

பதவி விலகிய நந்தா அவர்களது விலகல் கடிதத்தில் 'அரசில் நாணயக் குறைவும், ஒழுங்கீனமும் மலிந்து கிடக்கிறது' —என்று குறிப்பிட்டிருந்ததனையடுத்துப் பாராளுமன்றத்தில் மற்றொரு 'புயல்' வீசி ஓய்ந்தது.

இத்தனைக்கும் பிறகு, உள்துறை அமைச்சராக திரு. சவானும், பாதுகாப்புத்துறை அமைச்சராக திரு. சுவ்ரண்சிங்கும், வெளிநாட்டிலாகா அமைச்சராக திரு. பக்ருதின் அலி அகமது அவர்களும் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

'கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' என்பார்கள். காங்கிரசைத் தொற்று நோயாகப் பற்றிக் கொண்டிருக்கும் ஒரு இயல்பு—

அமைச்சர் பதவியிலிருக்கின்ற வரையில், அரசுத் தொடர்பான பொதுக் குற்றச்சாட்டுக்களை மறுப்பதும்-

பதவியைவிட்டு விலக்கப்பட்டு அல்லது விலகி வந்து, மன்றத்தில் மறுத்துக் கூறிய குற்றச்சாட்டுக்களை இவர்களே எழுப்புவதும்--

கடந்த காலங்களிலிருந்து தொடர்ந்து நடைபெற்று வரும் ஒருவித இனம் புரிந்து கொள்ளப்பட முடியாத நாடகமேயாகும்!

நமக்கு உள்ள அக்கறை, நந்தா பதவி துறந்ததோ, அதற்கு அவர் கூறுகிற காரணங்களோ அல்ல; அவரது வெளியேற்றத்துக்குப் பின் மத்திய அமைச்சரவையில் நடைபெற்றுள்ள சில மாறுதல்கள் பற்றித்தான்.

கடந்த பத்தொன்பது ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து பதவியிலிருந்து வரும் காங்கிரசுக் கட்சியின்மீது, மக்களின் வெறுப்பும் தொடர்ந்துகொண்டே இருக்கிறது-

காங்கிரசு அரசு, நாட்டுக்கென்று தீட்டிய திட்டங்களின் பலன்கள், 'இலட்சிய இலக்கை எட்டிப்பாராமல் 'எங்கோ பதுங்கிக்கொண்டிருக்கிறது' என்று காமராசரே கூறும் அளவுக்கு இருக்கின்றன.

திட்டங்களின் பலன் தான் இப்படியென்றால், 'எதையோ' எதிர்பார்த்து வகுக்கப்படுகின்ற சட்டங்கள்கூட, சந்து--பொந்துகள் உண்டுபண்ணப்பட்டு, எதிர்பார்க்கப்பட்டதற்குப் புறம்பான நிலைமைகளை தோற்றுவித்து விடுகின்றன.

இலட்சியங்களைப் பிரதிபலிக்கும் கொள்கைகளை வரையறை செய்வதற்கென்று கொண்டுவரப்படுகின்ற சட்ட திட்டங்களோ, கொள்கைகளோ--எதிர்பார்த்த நிலைமைகளைத் தோற்றுவிக்காமல், புதிய பல சிக்கல்களைப் பிறப்பித்து விடுகின்றன.

இப்படியான இடர்ப்பாடுகளில் இதுவரை இந்திய அரசுச் சிக்கி சீரழிந்து வருவதன் காரணமே. மக்கள் மனப்பாங்கை அறிந்து, அவர்கள் விருப்பு, வெறுப்பு, தேவைகள் பற்றிச் சட்டை செய்யாமல், எதேச்சாதிகாரப் போக்கில் செயல்பட்டு வந்ததுதான் என்பது அறிவாளர்கள் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள உண்மையாகும்.

மொத்தத்தில் காங்கிரசு அரசு, மக்களையும், அவர்களது கருத்துக்களையும் மதிப்பதில்லை என்பதும், அது சர்வாதிகாரப் போக்கில் நடைபோடுகிறது என்பதும் வெளிப்படையாகத் தெரிந்ததுதான்.

இத்தகைய காரணங்களினாலேயே நாட்டில் பரவலாக 'புரட்சி நிலை' உண்டாகிவிட்டிருக்கிறது.

காங்கிரசார் செய்கின்ற பாவங்களுக் கெல்லாம்' அதன் அறுவடைகளை மக்களே அனுபவித்துத் தீர வேண்டிய நிலைமை இருப்பதால். மக்கள் தங்கள் தங்கள் துயர் களைந்துகொள்ளவேண்டும் என்று நினைப்பதிலும் தவறு காணமுடியாது.

குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படும்போது குழறி எழும் அரசு, ஒரேயடியாகப் பொதுக் கருத்துக்களை உதறித்தள்ள முடியாதவர்களாக மாறி—எதையாவது செய்து தீரவேண்டிய நிர்ப்பந்த நிலைக்கும் தள்ளப்படுகிறார்கள்.

அத்தகைய நிர்ப்பந்தங்கள் பல வேளைகளில் வாக்குறுதிகள் தருவதாக உருவெடுப்பதும் உண்டு; சில வேளைகளில் இலாகா மாற்றங்களாக ஆவதும் உண்டு,

(15-ம் பக்கம் பார்க்க)

# தம்பி

"உணர்ச்சி ஒரு செல்வம். அதனைப் பெற்றதும் துள்ளிக் குதித்து ஓடி ஆடி அதனைப் பாழாக்கிவிடுவது அறிவுடைமை ஆகாது. அதனை அடக்கி ஆண்டு ஒருமைப்படுத்தி நேரான வழியில் பயன்படுத்தி பலன் அடைவதே அறிவுடைமையாகும்."

அன்பொழுகும் விழியினர் தென்மொழி தேன்மொழியே என்பதனை மெய்ப்பித்த நாவலர், பண்பாடு காப்பாற்றப்பட்டாலன்றி மனித குலத்துக்கே உயர்வு இல்லை என்றுரைத்த பாவலர், திரு. வி. கலியாணசுந்தரனாரின் கருத்தினையே மேலே தந்துள்ளேன். அஃது தமிழரின் இதயத்தில் பொறிக்கப்பட வேண்டியதோர் பொன்மொழியாகும்.

உணர்ச்சி ஒரு செல்வம்!

அடக்கி ஆண்டிடின் தக்கபலன் கிட்டும்,

# திரு. வி. க. கூறுகிறார்!

எங்கு சென்றிடினும் நமது கழகத்தோழர்களிடம் உணர்ச்சி பொங்கி வழிந்திடக் காண்கின்றேன். கொளுத்தும் வெயிலையும் கொட்டும் பனியையும் மழையையும் பொருட்படுத்துகின்றார்களில்லை. கவி பாடிடும் கண்ணினராகக் கூடுகின்றனர், திரள் திரளாக! எடுத்துக் கூறப்படும் கருத்தனைக் கூர்த்த மதியுடன் ஆய்ந்து பார்த்துக்கொள்கின்றனர். ஈடில்லா ஓர் எழுச்சி! மட்டற்ற ஓர் மகிழ்ச்சி! இந்த நூற்றாண்டின் இணையில்லா விழிப்புணர்ச்சி என்று எண்ணத்தக்க நிலைமை! காண்கின்றேன், களிப்புக் கடலில் மூழ்கிடுகின்றேன். எத்தனைக்கடமை உணர்ச்சி இவர்கட்கு! உழைத்திடும் உத்தமர்களாம் இவர்கள் ஊர் சீர்பட பாடுபட்டாக வேண்டும் என்ற பண்பு மிக்கோராகவன்றோ விளங்குகின்றனர். ஏழ்மை நலிவு! வாழ்வின் சுமை! எல்லாவற்றையும், தாங்கித் தாங்கி கூனிப்போய் குறுகிப்போய், எதிலும் ஈடுபாடு கொண்டிடத்தக்க தெம்பு அற்றுப்போய், 'இருக்கின்றோம் இறந்துபட! இறந்துபடும் வரையில் இடர்ப்பாட்டில் உழல்கின்றோம்! என்னே இவ்வாழ்க்கை! எதற்கோ இவ்வாழ்க்கை!' என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏக்கத்தால தாக்குண்டு கிடந்திடும் இவர்கள், நாடு, மொழி, வளம், உரிமை, நல்லறம், நல்லாட்சி என்பனபோன்ற இலட்சியங்களை உணர்ந்து, அவைதமைச் செயலிலே கண்டிட கிளம்பிடப் போகிறார்கள், என்ற ஐயப்பாடு குடையும் நிலையினருக்குப் புறப்பட்ட என்னையே, அவர்கள் தமது ஆர்வத்தினால், சலியாத உழைப்பினால், தளராத ஊக்கத்தினால், புது நம்பிக்கை கொண்டிடச் செய்துவிட்டனரே!

நான் அவர்களுக்கு உணர்ச்சி ஊட்டிடச் சென்றேன்! அவர்களல்லவா எனக்கு உன்னதமான உணர்ச்சியினைத் தந்துள்ளனர்.

ஏதாகிலும்கிடைத்திடாதா, கிழங்கு கிளிஞ்சல், போன்றவையேனும் என்று எண்ணிப் பூமியினைக் குடைந்திடும்போது, தங்கப்பாளம் கரத்தினில் தட்டுப்பட்டால் பெறுபவன் எத்தனை மகிழ்ச்சிப் பெற்றிடுவான். அந்நிலையன்றோ எனக்கு!



# மானம் என்ன மலிவுப் பொருளா?

உணர்ச்சி ஒரு செல்வம்! உண்மை! அந்தச் செல்வத்தைக் குவியல் குவியலாக, குன்றன்ன அளவினதாகக் காண்கின்றேன்; ஒவ்வோர் நாளும்; ஒவ்வோர் இடத்திலும்.

காலையிலே, மேயரும் மாவட்டச் செயலாளரும், மணி மொழியாரும் மற்ற நண்பர் சிலரும் மாநில மாநாட்டுக்கான 'திடல்' காண அழைத்துச் சென்றனர். சென்ற இடத்திலே, எத்தனை இனிய முகங்கள், நட்பு மொழிகள், வரவேற்கும் கண்கள்!

இடத்திலே கள்ளி காளான் நிரம்ப உள்ளனவே என்கின்றேன்; இதுதான் இடம் என்று தீர்மானித்து விடுங்கள், எட்டே நாளில் இந்த இடம் பட்டுபோல பளபளக்கிறது பாருங்கள் என்கிறார்கள்.

இங்குதான் மாநாடாம்! மாநில மாநாடாம்! தேர்தல் அறிக்கையும் வேட்பாளர் பட்டியலும் வெளியிட அமைகின்ற மாநாடாம்! நமது பக்கத்தில்! நமது பேட்டையில்! நமது வட்டத்தில்!—என்றெல்லாம் பரிவுடன் பேசுகின்றனர். கழகத்திடம் அவர்கள் கொண்டுள்ள பாசம், வைத்துள்ள நம்பிக்கை, தூய்மையானது; அது வளர்ந்தபடியும் இருக்கிறது. வஞ்சகத்தாலும் சதிச் செயலாலும் அதனை வீழ்த்திடவோ குன்றச் செய்திடவோ முடியவில்லை. காலைக் கதிரவன் போன்ற ஓர் எழிலுடன், உயிரூட்டம் தரும் சக்தியுடன், அந்த எழுச்சி விளங்குகிறது.

> கோடி கோடியாகக் கொட்டினாலும் கிடைத்திட முடியாத கருவூலம் நமக்குக் கிடைத்திருக்கிறது; உண்மை உழைப்பாளரின் உணர்ச்சி எனும் செல்வம்.

ஆடவர் மட்டுமல்ல, தாய்மார்கள்; வாலிபர் மட்டுமல்ல, முதியோர்கள், சிறுர்கள்; எல்லோரிடமுமே இந்த உணர்ச்சி ததும்பிடக் காண்கின்றேன்; உள்ளன்பு இருந்திடக் காண்கின்றேன். கண்டதும் ஓர் கனிவு! சொல் கேட்டதும் ஓர் பற்று! அழைத்ததும் ஓர் பாசம்! இதனைவிடச் சிறந்ததோர் செல்வம் எங்கும் இருந்திட முடியாது.

> பெருமழையால் வீடிழந்து விம்மிக் கிடந்திடுவோரைக் காணச் செல்கின்றேன், அவர்கள் வாழ்த்தொலி எழுப்பி அல்லவா வரவேற்கிறார்கள்!

> அண்ணன் வந்தானாமே உங்கள் அண்ணன்! என்னகொண்டுவந்து தந்தான்? உமது அல்லலைப் போக்கிட ஆளுக்கு ஆயிரம் என்று அள்ளித் தந்தான்?—என்று கேலி மொழி பேசிடக் கூடச் சிலர் உளர், எனினும் அந்த உத்தமர்கள், நான் என்ன தந்தேன் என்று கேட்டார்கள், அண்ணன் வந்தான்! எமது அல்லலைக் கண்டான்! ஆவன செய்திடுவான்!! என்றல்லவா நெஞ்சம் நெகிழக் கூறுகின்றனர்.

அத்தகைய உள்ளன்பும் உணர்ச்சிப்பெருக்கும் நிரம்பியுள்ள நிலை கண்டேன், பெருமகிழ்வு கொண்டேன்; ஆனால் மறுகணமோ கவலை என் மனதினைக் குடைந்தெடுக்கலாயிற்று.

இவ்வளவு உள்ளன்பையும் உணர்ச்சிப் பெருக்கையும், துச்சமென்று எண்ணி அல்லவா, ஆளவந்தார்கள், மீண்டும் நாங்களே அரியாசனம் அமர்வோம் என்று கூறுகின்றனர். அகந்தை அது என்போம். ஆயினும் எதனால் பிறந்துளது அந்த அகந்தை! இத்தனைத் தெளிவாக ஏழை எளியோர், பாட்டாளி விவசாயி, கழகப் பற்றினைத் தெரிவித்திடுவது கண்டும், ஆளவந்தார்கள், மீண்டும் தாமே தேர்தலில் வெற்றி பெறப் போவதாக, எந்தத் தைரியத்தினால் கூறுகின்றனர்?

> எழுச்சி இருக்கிறது; நிரம்ப; ஆனால் ஏழையரிடம்!

> ஏழையர், விலை கொடுத்து வாங்கிவிடத் தக்கவர்கள்.

> உணர்ச்சி இருக்கிறது; நிரம்ப!

> ஆனால் அந்த உணர்ச்சியை மங்கச் செய்திடலாம், மடியச் செய்திடலாம், காசு வீசி!

இவ்விதமாகவன்றோ, தம்பி! காங்கிரஸ் கட்சியினர் எண்ணுகின்றனர். ஏழையர்! ஆகவே அவர்களை விலை கொடுத்து வாங்கிவிடலாம்; பணத்தால் அடித்து வீழ்த்திவிடலாம் என்றல்லவா எண்ணுகின்றனர்.

> மனித இதயத்தை, தன்மானத்தை, உரிமை உணர்ச்சியை, கொள்கைப்பற்றை, அவ்வளவு மலிவான பண்டமாக அல்லவா கருதுகின்றனர்! பணம் பெருத்தான்கள்!

> கேவல ஜென்மங்கள் என்றல்லவா கருதுகின்றனர், ஏழையரை!

இதனை எண்ணும்போதுதான் தம்பி! கவலை என் உள்ளத்தைப் பிய்த்துத் தின்னுகிறது.

> காங்கிரஸ் ஆளவந்தார்கள் எண்ணுவது போல, ஏழையர் வீழ்ந்துபடுவர் என்ற அச்சம் அல்ல எனக்கு: எங்ஙனம் அவ்விதமான அச்சத்தை நான் கொள்ளமுடியும். நான் காணும் கண்ணொளி, பாவனையா! நான் கேட்டிடும் பாசப்பேச்சு, பாவனையா! இல்லை! இல்லை! முக்காலும் இல்லை! இதயம் பேசுகிறது! உணருகின்றேன்! ஆகவே அவர்களை விலைகொடுத்து ஆளவந்தார்கள் வாங்கிவிடுவர் என்ற அச்சம் நான் கொண்டிடவில்லை?

> நான் கவலைகொள்வதற்குக் காரணம், பெரும்பாலான மக்களை ஏழ்மையிலே தள்ளி வைத்துள்ள எத்தர்கள், வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவதுபோல, கேவலப்படுத்தவும் துணிகின்றனரே என்பதுதான்.

மந்தகாச வாழ்வு நடாத்தும் சீமானின் மாளிகைகளிலே, கொள்ளை இலாபமடிக்கும் வணிகக் கோட்டங்களிலே கூடிப்பேசுகின்றனர், தம்பி! கொந்தளித்தபடி இருக்கும் இந்த எழுச்சியை எப்படி வீழ்த்துவது என்பதுபற்றி, போர்முறை வகுக்கிறார்கள்,

> எதிர்த்துத் தாக்குவதா!

> சுற்றி வளைத்துக்கொள்வதா!

# மும்முனைப் போட்டிக்கு முயற்சிக்கின்றனர்?

பக்கவாட்டத்திலே பாய்ந்துபிளப்பதா!
கோட்டைக்குள்ளே குத்துவெட்டு
எழச்செய்வதா!

எந்த முறையிலே தாக்குதலை அமைத்துக்கொள்வது என்று சூழ்ச்சி வகுத்தபடி உள்ளனர். காங்கிரசுக்கு எதிர்ப்பாக உள்ள ஓட்டுகள் சிதறிடாதபடி பார்த்துக் கொள்ள, மும்முனைப் போட்டியைத் தவிர்த்திட வேண்டும் என்பதற்கான தொகுதி உடன்பாடு ஏற்பட்டுவிடினும்,

ஏதாகிலும் ஒரு கட்சியைக் கிளப்பி
விட்டோ, தனிப்பட்டவாகளைத் தூபம்
போட்டோ, மும்முனைப் போட்டியை உண்
டாக்கியே தீருவது என்பது காங்கிரஸ்கார
ரின் சூழ்ச்சித் திட்டங்களிலே ஒன்று.

இதனை அவர்கள் மிக வலிவுள்ள திட்ட
மென்றும் நம்புகின்றனர்.

தி. மு. கழகம் மிகமிகச் சாமான்யர்களாலே நடத்தப்பட்டு வருவது. அதன் வளர்ச்சிகண்டு அருவெறுப்பு கொண்டோர் உளர்; அவர்களைத் தட்டிவிட்டுப் போட்டியை மூட்டிவிடலாம் என்று கருதுகின்றனர்.

தம்பி! முதன் முதல் கழகம் தேர்தலிலே வெற்றி பெற்றபோது, காங்கிரசைக் காலமெல்லாம் எதிர்த்து வந்தவர் ஒருவர்—ஆனால் நமது கழகம் அல்ல—என்னைத் தருவித்து, தமது வாழ்த்தையும் பாராட்டுதலையும் தெரிவித்ததுடன், இந்த விதமான வெற்றியும் வளர்ச்சியும் கழகத்துக்குக் கிடைத்திடும், அதிலும் இவ்வளவு குறுகிய காலத்தில் என்று நான் எண்ணிடவே இயலவில்லை, எப்படியோ நல்ல இடம் கிடைத்துவிட்டது; இனி அதனைக் கெட்டிப்படுத்திக்கொள்ள வேண்டும், என்றுரைத்தார். மகிழ்ச்சி அடைந்தேன். 'இதுவரையில் கழகத்துக்கு ஆதரவு காட்டாதிருந்து வந்தவர்களெல்லாம் கூட, இது வளருகிற கட்சிதான் என்பது இப்போது மெய்ப்பிக்கப்பட்டுவிட்டதால், இனி ஆதரவு அளித்திட முன்வருவார்கள் என்று பேசி என் ஆவலைக் கிளறினார்.

அந்த ஆவலுடன் எனக்கோர் ஐயப்பாடு கிளம்பிற்று. ஆதரவு கிடைத்திடும் என்கிறாரே, எந்த இடத்து ஆதரவோ என்பது பற்றிய ஐயப்பாடுதான்! அவரே அதனைப் போக்கிவிட்டார்; "நான் சில கம்பெனிகளுக்குச் செல்ல முடியும், ஆதரவு காட்டச் சொல்லி; அவர்களுக்கெல்லாம் சில இலட்சங்களை நன்கொடையாகக் கொடுப்பது என்பது மிக எளிதான காரியம்" என்றார்.

இனறு வெட்டுகிறார், கிளப்புவது கிளம்பட்டும் என்று எண்ணிக்கொண்டு நான் ஏதும் பேசாதிருந்தேன்; அவர் தமது பேச்சைத் தொடர்ந்தார்.

"ஒரு காரியம் செய்யவேண்டும் நீங்கள்; தொழில்களை— பஸ்கள் போன்ற தொழில்களை—தேசியமயமாக்கவேண்டும்; என்ற பேச்சை விட்டுவிட வேண்டும்; அது சரியான திட்டமல்ல; அதனை மட்டும் கழகம் மறுத்து விடுமானால், தொழிற் கோட்டங்கள் உமது கழகத்துக்கு நன்கொடை தந்திடத் தாராளமாக முன்வரத் தயக்கம்கொண்டிடா" என்றார்.

புரிகிறதல்லவா, தம்பி! நமது கொள்கையை விலை பேசுகிறார்! என்னிடம்! எந்தக் கொள்கையைக் கூறி மக்களின் பேராதரவைப் பெற்றோமோ, அதே கொள்கையை, கம்பெனிகளிடம் நன்கொடை வாங்கிட, 'விட்டுவிட'ச் சொல்லுகிறார்!!

நமது வளர்ச்சியும் வெற்றியும் அவருடைய மனதிலே அந்த அளவுக்குத்தான் மதிப்பைக் கொடுத்தது.

நான் கோபம் கொள்ளவில்லை. வீண் வேலை அல்லவா! அவர், அவருடைய 'அரசியலை'ப் பேசினார். எங்கள் அரசியல் வேறு என்று கூறிவிட்டு வந்துவிட்டேன்.

கழகம் வளர வளர இதுபோல வளைந்து
கொடுக்கும் என்ற நினைப்பு நிரம்ப இருந்து
வந்தது. இப்போது வெகுவாகக் குறைந்து
விட்டது. என்றாலும், கழகத்தில் சிலரிட
மாவது இந்த வலையை வீசிடலாம், ஏதாவது
பிடிபடக் கூடும் என்ற நப்பாசை கொண்
டோர் சிலர் உளர்.

அது ஒரு காரணம், கழக ஆதரவாளர்
களை வீழச் செய்துவிடலாம் என்று எண்
ணித் திட்டமிடுவதற்கு.

ஆனால் இவைகளையெல்லாம்விட தம்பி! அவர்கள் மிகப் பலமாக நம்பிக் கொண்டிருப்பது, உணர்ச்சி ஒரு செல்வம், அதனை அடக்கி ஆண்டால் மட்டுமே பலன் கிடைக்கும் என்பதனை அறியாது, ஓடி ஆடி, உணர்ச்சியைப் பாழாக்கிக் கொள்ளுவோம் என்பதிலேதான். அதனை உணர்ந்துதான் தம்பி! தெளிந்த சிந்தனையாளர் திரு. வி. க. வின் மணிமொழியைத் துவக்கத்திலே தந்துள்ளேன்; உணர்ச்சியைப் பதப்படுத்தி பயன் பெற்றிட முனையவேண்டும்.

மின்னல் கண்ணைப் பறித்திடும்; இரு
ளைப் போக்கிடாது.

அகல் விளக்காயினும் போதும், இரு
ளைப் போக்கிட.

உணர்ச்சியைச் சிதறடித்துவிடுவோம் என்ற எண்ணத்துடன் தம்பி! அவர்கள் நம்பிக்கொண்டிருப்பது, நமது பணி நின்று நிதானமாக, தட்டாமல் தயங்காமல், தொடர்ந்து இருக்க முடியாது என்பதிலே.

இவர்களோ ஏழைகள், இல்லாமை கொட்டிக் கொண்டிருக்கும்; இந்நிலையில் இவர்கள் ஆர்வம் மிக்கவராயினும், தொடர்ந்து எங்கிருந்து தொண்டாற்றப் போகிறார்கள்; இடையிலே சோர்ந்துபோவர், தளர்ந்து போய்விடுவர்—என்று நம்புகின்றனர்.

கூட்டம் கூட்டுவர் கோலாகலமாக.

கொடிகளை நாட்டுவர் கொண்டாட்ட
மாக.

முழக்கம் எழுப்புவர் இடிபோன்றதாக.

ஆனால், பரபரப்பான வேலையிலே
தம்மை ஈடுபடுத்திக்கொள்வதன் காரண
மாகவே, அலுத்துப்போய்விடுவர்;
தொடர்ந்து பணியாற்றும் இயல்பு எழாது;

# வலைவீசும் சக்தி வளர்ந்திருக்கிறது தம்பி!

வலிவு இராது, பழக்கம் இல்லை; பயிற்சி இல்லை என்று பேசிக்கொள்கின்றனர்.

ஒருவிதத்திலே இதிலே பெருமளவு உண்மையும் இருக்கத்தான் செய்கிறது என்பதனை நான் முன்பு நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலேயே பார்த்திருக்கிறேன்; அதற்காக வருத்தப்பட்டும் இருக்கிறேன்.

தொகுதியின் அமைப்பு, வாக்காளர் நிலை, அவர்களின் தொடர்புகள், உள்ள வாக்காளர்களில் எத்தனை சதவிகிதத்தவர் வாக்கு அளித்திடுவர், ஏன் மற்றவர் வந்திடுவதில்லை, என்பனபோன்ற தகவல்களைத் திரட்டி அவற்றிற்கு ஏற்ப வேலையை அமைத்துச் செல்வது என்பதிலே, நமது கழகத் தோழர்களுக்கு இருப்பதைக் காட்டிலும் அதிக அளவிலும் நேர்த்தியான முறையிலும், பயிற்சி, காங்கிரசில் உள்ளவர்களுக்கு இருக்கிறது.

இந்த நிலை இப்போது குறிப்பிடத்தக்க அளவுக்கு மாறிவிட்டிருக்கிறது என்பது மகிழ்ச்சி தருகிறது. என்றாலும் இந்தத் துறையிலே நமது கழகத் தோழர்களின் பயிற்சி மேலும் செம்மைப்பட்டாகவேண்டும்.

பொதுத் தேர்தலிலே நாம் நமது கடமையாகக் கருதி ஓட்டுச் சாவடி சென்றாகவேண்டும் என்ற உணர்வு கொண்டவர் தொகை வளர்ந்து வருகிறது என்றாலும், இன்றும் அதனைக் கடமை என்று கொள்ளாதாரின் தொகை பெரும் அளவு இருக்கத்தான் செய்கிறது.

ஆனால் காங்கிரஸ் கட்சியில் தேர்தல் தந்திரம் அறிந்தவர்கள், மேற்கொள்ளும் சூழ்ச்சி காரணமாக,

ஓட்டுச் சாவடிக்கு வராதவர்களின் ஓட்டுகளெல்லாம் காங்கிரசு கட்சிக்குக் கிடைத்திடும் விந்தை நடைபெற்றுவிடுகிறது.

ஆகவே, நமது கழகத் தோழர்களிடம் எழுச்சி இருந்தால் மட்டும் போதாது, தொடர்ந்து செயலாற்றும் இயல்பு வளரவேண்டும்; அவற்றுடன் விழிப்புணர்ச்சி வேண்டும், காங்கிரஸ் கட்சியினர் மேற்கொண்டிடும் குறுக்குவழிச் செயல்களைக் கண்டறிந்து தடுத்திட!

தம்பி! அவரவரும் தத்தமது தொகுதியைப் பொறுத்த மட்டில், இப்போதிருந்தே, இந்தத் துறை பற்றி அக்கறை செலுத்தியாகவேண்டும்; முறைகளைச் செம்மைப்படுத்தியாக வேண்டும். நாம் வளர்ந்திருக்கிறோம்; அதனை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்; நம்மை ஒழித்தாலன்றி தமது ஒய்யார வாழ்வுக்கு எதிர்காலம் இல்லை என்பதனை அவர்கள் உணர்ந்துகொண்டுவிட்டுள்ளனர்; ஆகவே இந்த முறை அவர்களின் தாக்குதலிலே கடுமை மிகுதியாக இருக்கும்; முறைகளிலே சூழ்ச்சி அதிக அளவில் இருக்கும்.

காங்கிரசுக் கட்சி இலட்சியத்தை இழந்துவிட்டது; கொள்கை வலிவு அதனிடம் இல்லை; ஆகவே காங்கிரசுக்கு மக்களைத் தன்பால் ஈர்த்திடும் சக்தி கிடையாது என்கிறோம். இது உண்மையுங்கூட' கொள்கை வலிவ இழந்துவிட்டது, காங்கிரஸ் கட்சி என்பது வரையில்.

ஆனால் கொள்கையாளர்கள் இருந்த நாட்களைவிட ஓட்டு வேட்டையில் வல்லவர்கள் சேர்ந்திருக்கும் இந்த நாட்களில் காங்கிரஸ் கட்சிக்கு, மக்கள்மீது வலைவீசும் சக்தி வளர்ந்திருக்கிறது.

தம்பி! காங்கிரஸ், தூய்மை மிக்கதாக, நாட்டு மக்கள் அனைவரும் 'பயபக்தி விசுவாசம்' செலுத்திடத் தக்க நிலையினதாக இருந்தபோது, தேர்தலில் வெற்றிபெற அந்தக் கட்சி எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கும் தூய்மை இழந்த இன்றைய நிலையில் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

தூய்மை மிக்க தேசிய ஸ்தாபனமாகக் காங்கிரஸ் விளங்கியபோது, காங்கிரசின் பெயரால் யாரை நிற்க வைத்தாலும் ஓட்டளித்து வெற்றி பெறச் செய்யவேண்டும் என்றனர்.

மக்கள் அது போன்றே, தேர்தலில் யார் நிற்கிறார் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் மகாத்மா கட்சிக்கு ஓட்டுப் போட முனைந்தனர்.

யாரை நிற்கவைத்தாலும் என்று நான் மரியாதைக்காகச் சொன்னது, காங்கிரசின் பேரால் எதை நிற்க வைத்தாலும், என்பதாகும்.

ஏஜண்டுகள் தேவை

**மலையாள வைத்தியசாலை**

"கிஸ்கோ" (ஜில்லா ஏஜண்ட்) மலையாள பார்மஸியில் தயாராகும் பவர்கூடிய ஆசவ அரிஷ்டங்கள் விற்பனை செய்ய எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

எங்களது ஏஜண்டுகள்:

K. M. சாகுல்ஹமீது, 95, அபிபுல்லாரோடு, சென்னை-17
N. K. C. சண்முகம் அண் கோ., அங்காளம்மன் கோயில் தெரு, கோயம்புத்தூர்-1
K. M. சம்சுதீன், 28, கிருஷ்ணாபுரம், மதுரை,
R. M. A. கோபால் அண் பிரதர்ஸ் ரெங்காராஜா தியேட்டர் சமீபம், பழனி.
N. மகாசாமி, விசாலாட்சி தியேட்டர் சமீபம், தாராபுரம்.
N. சாகுல் அமீது, மெயின்ரோடு, பார்த்திபனூர்.
S. கந்தசாமி, என். கோவில்பட்டி, நத்தம்.
D. ரெங்கநாதன், நல்லமநாய்க்கன்பட்டி, தாராபுரம்.
K. சாகுல்ஹமீது, டர்னபுரம், கொடைக்கானல்.
இராஜகோபால், கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு அருகில் சண்முக முதலியார், ஒட்டன்சத்திரம். [மணப்பாறை.

உடனே விண்ணப்பிக்க:

State Sole Agent: சுலைமான்

மலையாள வைத்தியசாலை,

நெ. 145, R. S. ரோடு, :: திண்டுக்கல்-3




## 2—25
## போர்க்களம் கண்டவள்

'திருமேனி!' என்று மெல்ல அழைத்து, அவளது பட்டுக் கன்னங்களைக் குலசேகரன் தடவித் தருகிறான்.

'அத்தான்!' என்று அந்தச் சோலைக் குயிலாளின் இதயத்தில் ஒரு தந்தி அசைகிறது. அவளது கனியுதடுகள்கூட அசைகின்றன. ஆனால் எந்தவிதசப்தமும் வெளியே வரவில்லை.

'என் உயிரே!'

அந்தப் பருவமங்கையின் வழவழப்பான தோள்களை அவன் தடவிக்கொடுக்கிறான்.

திருமேனி உடலின் ஒவ்வொரு அணுவும் இன்பத் தாண்டவம் ஆடுகின்றன! அவனது மலைத் தோள்களைத் தழுவ, அவளது தங்கக்கரங்கள் துடிதுடிக்கின்றன. ஆணழகனின் பரந்த மார்பில் இணைய, அந்த மலர் மேனியாளின் இளமை நிறைந்த மார்பு விம்மி விம்மி! அடங்குகிறது!

அவன் இதழைத் தொட்டான், முகத்தில் விழுந்திருந்த மயிர்ச் சுருள்களைத் தள்ளிவிட்டான், கழுத்திலிருந்த தூசைத் துடைத்தான், கன்னத்தைத் தடவினான். தோள்களை வருடினான்—இவ்வாறு படிப்படியாக அவன் தைரியம் அதிகமாகிக்கொண்டே சென்றது!

திருமேனியின் அகத்தில் இன்பம் ஒரு பக்கம், பயம் ஒரு பக்கம்! பாண்டியனின் குறும்போ நொடிக்கு நொடி அதிகரித்துக் கொண்டே சென்றது! அவனது ஒவ்வொரு செயலும் அவளுக்குக் களிப்பைத்தான் தந்தது! ஆனாலும் ஏதோ ஒரு திகில், அவள் மனத்தில் சுற்றிச்சுழன்றுகொண்டிருந்தது!

அவன் தன்னை ஏதோ ஒரு மாய உலகத்திற்கு அழைத்துச் செல்கிறான் என்பதை அவளால் உணர முடிந்தது! அந்தப் புதுமை உலகைக் காண்பதா, அல்லது அவன் பிடியை உதறிக்கொண்டு திரும்பியோடி வந்துவிடுவதா என்று யோசித்தாள்.

'இச்!'

அவள் தன் உதட்டை வாயினுள் மடக்கி பற்களால் தடவிக் கொடுத்தாள். 'என்ன துடுக்கு' என்று ஒரு குரலும், 'என்ன இனிமை'' என்று மற்றொரு குரலும்—அவள் உள்ளத்தில் மாறி மாறிப் பேசின.

அவளால் யோசிக்கக்கூட முடியவில்லை. ஏதோ ஒரு சுழலில் தான் சிக்கிக்கொண்டு, ஆழமான ஓர் இடத்தில் மூழ்கிச் செல்வதாக அவளுக்குத் தோன்றியது.

"இலங்கை அரசனின் திருமகள் நான்! போர்க்களம் கண்டவள்! அப்படிப்பட்டவளா இப்படி திக்குத்திசை தெரியாத படகாய் அலைவது? திருமேனியா உறுதி குலைவது?' என்று அவள் மனத்தில் ஒரு குரல் முரசொலி செய்தது.

'இச்!'

செவ்விதழில் அல்ல, சிவந்த கன்னத்தில் அந்த முத்தம் பதிந்தது.

'இது என்ன?' என்று ஆத்திரங் கொண்டவளைப்போலச் சொல்லிக் கொண்டே, கண்களைத் திறந்தாள்.

'எதைக் கண்ணே, கேட்கிறாய்?' என்று சொல்லிக்கொண்டே அவளது தலையைத் தூக்கித் தன் மடியில் வைத்துக்கொண்டான்.

'ஈ' ஈ!' என்று அழகு காட்டிவிட்டு, எழுந்து உட்கார கீழ் கைகளை ஊன்றினாள்.

அந்த இளங்குமரி எழுந்திருக்க முடியாதபடி, அவளது தோள்களைப் பிடித்து அழுத்தி, அப்படியே படுத்திருக்கச் செய்தான்.

'அழகாகத்தான் இருக்கிறது!' என்று வெறுப்புக் கொண்டவளைப் போலப் பேசினாளே ஒழிய, அந்தக் காளையின் மடியில் ஏதோ ஒரு புது உணர்ச்சி ஊறுருய்க் கசிவதை உணர்ந்து உவகை கொண்டாள்.

'இதோ பாரேன் கண்ணே; எங்கோ இருக்கும் சூரியன் மண்டபத்திற்குள்ளே எட்டிப் பார்ப்பதை! இந்த நிலையில் உன்னைக் காண்பது ஆயிரமடங்கு அதிக அழகாக இல்லாவிட்டால், அவன் தன் குடையெல்லாம் கக்கிவிட்டு, இப்படிக் காமத்தால் கண் சிவக்க அடிவானத்தில் ஒண்டி நின்று கொண்டு — ஏன் எட்டிப் பார்க்கப் போகிறான்?'

'உங்களைப்போல அல்ல, சூரியன் — அவன் மிகவும் நல்லவன்! யோக்கியன்! பெண்களிடத்தில் எவ்வளவு மரியாதையோடு நடந்து கொள்ள வேண்டுமென்பதை நன்ருகத் தெரிந்தவன்!'

'சூரியனா நல்லவன்? யோக்கியன்? அவன் கதை உனக்குத் தெரியாத - அதனால்தான் இப்படி அவனைப் புகழ்ந்து பேசுகிறாய்! எவ்வளவு தான் காம உணர்ச்சி அதிகமானாலும், எந்த ஆண் மகனும் செய்ய வெட்கப்படும் — அத்தகைய கீழ்ச் செயலை செய்தவன், இந்த யோக்கியன்!'

"அதெல்லாம் சுத்தப் பொய்!"

"நடந்ததைச் சொன்னால் நம்புவாய் அல்லவா?"

"நடந்ததை நீங்கள் பார்த்தீர்களா?"

பார்த்ததைப் போலத்தான் பெரியவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள், புராணங்களில்!'

"யாருடைய பெரியவர்கள்?"

'யாருடைய பெரியவர்களோ— எதற்கு இப்பொழுது அதெல்லாம்! சூரியன் யோக்கியன் அல்லன் என்பதை நிரூபிக்க என்னிடம் ஆதாரங்கள் பல இருக்கின்றன! அவற்றிலே ஒன்றைச் சொல்கிறேன் கேள்! பூலோகத்தின் வழியாக ஒரு சமயம் சூரியன் சென்றுகொண்டிருந்தபோது ஒரு இடத்தில் அழகான ஒரு பெண் பதுமையை, அவன் பார்த்தான்! மண்ணினால் செய்த அந்தப் பதுமை, மிகவும் அழகாக இருந்ததாம்! அந்தப் பொம்மையைக் கண் சிமிழ்க்காமல், சூரியன் சிறிது நேரம் பார்த்தான்! உடனே அவன் மனத்தில் காதல் உணர்ச்சி கசியத் தொடங்கியது!—'

"பொம்மையைப் பார்த்தா?"



"பெண் பொம்மையைப் பார்த்து உள்ளத்தில் வெறியுணர்ச்சி அதிகரிக்க அந்தப் பதுமையைப்பார்த்து மண்டியிட்டு காதல் பேச்சு ஆரம்பித்துவிட்டான்! கடைசியில் அந்தப் பதுமையை எடுத்து மார்போடு அணைத்து, முத்தமும் தந்தான்! என்ன ஆச்சரியம், உடனே அந்தப்பதுமை ஸாவர்ணியென்ற ராஜரிஷியைப் பெற்றெடுத்து விட்டது! திருமேனி, இப்பொழுது நீயே யோசித்துப் பார்—பொம்மையிடம் குழந்தையைப் பெற்றெடுத்த அந்தச் சூரியன் எவ்வளவு பொல்லாதவன் என்று!"

இவ்வாறுசொல்லிவிட்டுக்குலசேகரன்சிரித்த போது அதுதான் நல்ல சமயமென்று, அவனது மடியினின்றும் துள்ளியெழுந்தாள் திருமேனி!

"திருமேனி!" என்று சொல்லிக்கொண்டே அவன் பிடித்த கரத்தை உதறிக்கொண்டு, அவள் மண்டபத்தை விட்டு வெளியே ஓடினாள்.

"ஓடாதே, கண்ணே!" என்று அவளைத் துரத்தினான்.

குளக்கரையைவிட்டு இறங்கியோடிய திருமேனி, மரஞ்செடிகள் நிறைந்த ஒரு குன்றின் அடிவாரத்தை அடைந்தாள்.

ஒரு கொங்கு மந்தாரை மரத்தின்மீது மூச்சு வாங்க சாய்ந்து நின்றவளின் உள்ளத்தில், "குலசேகரனை நான் காதலிப்பது சரியா?" என்ற கேள்வியெழுந்தது.

செடிகளின் மறைவில் பூனைபோல் பதுங்கி வந்த குலசேகரன் அவளது கண்களை மூடினான்.

"போதுமே விளையாட்டு!" என்று சிரித்துக் கொண்டே, கண்களை மூடிய கைகளை விலக்கிக் கொண்டு அவனது முகத்தைத் திரும்பிப் பார்த்தாள்.

அந்தக் கன்னிப் பெண்ணின் முகம் மலர, அதரங்களின் துடிப்பிலிருந்து 'அத்தான்!' என்ற தித்திப்பு வார்த்தை கீழே உதிர்ந்தது!

"கண்ணே!"

அவன் அருகே நெருங்கினான்.

"ஆகா, என்ன அவசரம்?"

அவள் மான்போல் துள்ளி குன்றின்மீது ஓடினாள். அங்கே ஒரு பாறையின்மீது உட்கார்ந்து, பக்கத்திலிருந்த காட்டு ரோஜா மலர் ஒன்றைப் பறித்தாள்.

அருகில் வந்து அமர்ந்த குலசேகரன், அந்த மலரை வாங்கி அவளது கூந்தலில் வைத்தான்.

"போங்கள் அத்தான், தங்கள்மீது எனக்குக் கோபம்? என்று முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள்.

அவன் சிரித்துக்கொண்டே அவள் முகத்தைத் திருப்பி, 'கோபமா?' என்றான்.

"சிரிப்பது இருக்கட்டும் அத்தான் நீங்கள் நேற்று என்னைப் பார்த்த பார்வை..."

"பிடிக்க வந்த மனிதனை அந்தக் காளைமாடு பார்த்ததே — அப்படி இருந்ததா?"

"அப்படி இருந்தாலும் பரவாயில்லையே! உங்கள் கண்களின் கோணற் பார்வையையும் உதடுகளின் அந்தக் குறும்புப் புன்னகையையும் —யாராவது பார்த்துவிட்டிருந்தால்?"

"காதல் எனும் பொன்விலங்கை, இந்த வாலிபனுக்குப் பூட்டிவிட்டாள் திருமேனி—என்ற இரகசியத்தைப் புரிந்துகொண்டிருப்பார்கள்!

அவ்வளவுதானே? பெண்களேயே கண்ணெடுத்தும் பார்க்காத துர்வாசர் என்று என்னைப் பற்றியும், ஆண்களின் வாடையே கூடாதென்று காவி பூண்ட மணிமேகலை என்று உன்னைப் பற்றியும்—இவ்வூரார் நினைத்துக் கொண்டிருக்கிறார்களா, என்ன? உம்! அதற்காகவா பயப்படுகிறாய்? என்றைக்காகிலும் ஒரு நாள் இது தெரிய வேண்டியதுதானே, திருமேனி!' என்று மகிழ்ச்சியோடு சொல்லிக் கொண்டே, அவளது மலர்க் கன்னத்தைக் கிள்ளினான்.

"ஊரைப் பற்றி நான் உரைக்கவில்லை, அத்தான்! நேற்று நாமிருவரும் பரிமாறிக் கொண்ட பார்வையிலிருந்து என் அப்பாவிற்கு உண்மை தெரிந்துவிட்டது! இரவெல்லாம் என்னை எப்படிக் கோபித்துப் பழித்தார் தெரியுமா? தங்களை யார் என்று சொல்லும்படி படாதபாடு படுத்தினார்!" என்று சோகத்தோடு சொன்னவளை இடைமறித்து, 'நான் யார் என்று சொல்லிவிட்டாயா?" என்று திடுக்கிட்டுக் கேட்டான், குலசேகரன்.

"ஏமாந்துவிட்டீர்களா அத்தான் ஏமாந்துவிட்டீர்களா? நம் காதல் யாருக்குமே தெரியாது, பயப்படாதீர்கள்" என்று திருமேனி கலகலவென்று சிரித்துக்கொண்டே சொன்னாள்.

"ஏமாற்றி விட்டாயா? சரி சரி! இதோ அதற்குப் பரிசு!" என்று குறும்போடு அவள் கன்னத்தில் தட்ட, நாணத்தோடு அவள் தலை குனிந்து கொண்டாள்.

பக்கத்திலிருந்த செடியினின்றும் அவன் ரோஜா மலர் ஒன்றைப் பறித்தான்.

அந்த மலரைத் தன் கூந்தலில் தான் சூட்டப் போகிறான் என்ற எண்ணத்தோடு அவள் தலையைக் குனிந்து காட்டினாள்.

கூந்தல் மலரை வைக்காமல், வாய்விட்டுச் சிரித்துக்கொண்டே, அவளது முகத்தை உயர்த்தினான்.

"ஏன் சிரிக்கிறீர்கள், இப்படி?" என்று செல்லக் கோபத்தோடு அவள் கேட்டாள்.

"இந்த மலரை உன் கூந்தலில் சூட்டுவேன் என்றுதானே நீ நினைத்தாய்?"

"எனக்குத் தெரியாதா இந்த மலரைத் தாங்கள் இலிங்கத்தின் தலையில் போடுவீர்களென்று!"

"ஏமாந்ததை மறைக்க இலிங்கத்தை நடுவில் இழுக்கிறாயா? மகாக் கெட்டிக்காரிதான் நீ!"

"நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான கெட்டிக்காரிதான்!"

"அப்படியானால் இந்த மலரை எதற்காகப் பறித்தேன் என்பதைச் சொல்லேன் பார்க்கலாம்!'

"சொல்ல முடியாது!"

"நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நேற்றிரவு நடந்ததை உனக்கு நான் சொல்லாமலிருக்கப் போவதில்லை! கேளேன் அதை! நேற்றிரவு நான் புத்த விகாரத்திற்கு எதிரில் ஒரு கயிற்றுக்கட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கும்போது, என் முகத்தின்மீது ஏதோ விழவே நான் விழித்துக்கொண்டேன். தலையணைமீது ஒரு புது ரோஜா மலர் விழுந்துகிடந்தது! இந் நேரத்திலே — தனித்திருக்கும் இரவு வேளையில் — நம்மீது ரோஜாவை வீசி எறிந்தவர் யார் என்று எழுந்து உட்கார்ந்து சுற்றிலும் பார்த்தேன்! சிறிது தூரத்தில் செல்விழிகள் துடிக்க—செவ்விதழ்கள் சிவக்க—பறித்தெடுத்த செந்தாமரையைப்போல, ஒரு பசும் பொன்மேனியாள் நின்றிருந்தது பால் நிலவில் நன்றாகத் தெரிந்தது!

"பால் நிலவா? பசும்பொன்மேனியாளா?" என்று குறும்போடு திருமேனி கேட்டுவிட்டு, "பிறகு?" என்றாள்.

"ஏன் திருமேனி உனக்கு இவ்வளவு அவசரம்" சொல்ல ஆரம்பித்தவன் அரைகுறையாகவா நிறுத்திவிடுவேன்!"

"ஒரு சுந்தரி நின்றிருந்தாள், பிறகு——"

"கண்ணிமைக்காமல் அவளை நான் பார்த்தபடியே, நிமிர்ந்து உட்கார்ந்தேன்! அடிமேல் அடிவைத்து, அந்த அழகு மேனியாள்—மான்விழி மடந்தை—மதுரமொழிக்கிளியாள் — என் அருகே வந்து நின்றாள்! 'யார் நீ?' என்று நான் அதட்டிக் கேட்டதும், அவள் கன்னத்தில் குழிவிழ கலகலவென்று சிரித்தாள்!"

"சிரித்தாளா? உம்மைப்பார்த்தா? பிறகு?" என்று கவலைகொண்டவளைப்போல அவள் கேட்டாள்.

"பிறகு என்ன? கட்டிலில் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்துவிட்டாள். அந்தப் பொன்மேனியாள்! 'எதற்காக இங்கு வந்தாய்?' என்று கேட்டேன்!"

"அதட்டிக் கேட்டீரா, ஆசையோடு கேட்டீரா?"

"அதட்டித்தான்!"

"அதற்கு அவள் என்ன சொன்னாள்?"

"என்ன சொன்னாள் தெரியுமா பட்டாடை பூண்டு பளபளப்போடு இருந்த தன் செளந்தரிய உடலைக் குலுக்கி, புன்சிரிப்பெனும் பாணத்தால் என் உள்ளத்தைத் தாக்கியபடி, அந்தத் தேன்மொழியாள் சொன்னாள் —'நம்மிருவர் உள்ளங்களுக்கிடையே காதலெனும் தங்கப் பாலம் அமைக்க வந்திருக்கிறேன்! என்று!"

"உடனே தாங்கள், கனிரசமே, கரும்புரசமே, தித்திக்கும் தேனே, மருளும் விழி மானே என்றெல்லாம் கொஞ்ச ஆரம்பித்துவிட்டிருப்பீர்!"

"ஆமாம் திருமேனி! அன்றலர்ந்த புதுரோஜா போன்ற அவள் அழகுமேனியை அள்ளிப் பருக, துடிதுடிப்போடு நான் அருகே சென்றபோது......"

"போதும் நிறுத்துங்கள் அத்தான்! நடந்த அக்கிரமத்தை நாகூசாமல் சொல்கிறீர்களே! நானிருக்க தங்கள் மனத்தை வேறொருத்தியிடம் பறிகொடுத்தது தகுமா? முறையா? இது தர்மமா? அன்பே, ஆருயிரே, இன்பமே என்றெல்லாம் கற்கண்டினும் இனிய வார்த்தைகளைச்சொல்லி, என் கன்னியுள்ளத்தைக் கவர்ந்துவிட்டு, இப்பொழுது கைவிடுவது நீதியா? நேர்மையா? அத்தான், இப்படி துன்பச் சுழலில் நம் இன்ப உலகம் திடீரென்று மூழ்கிவிடுமென்று நான் கனவுகூடக் காணவில்லையே! கருப்பங்கட்டியைப்போல இனிக்க இனிக்கப் பேசியது, இப்படி எனக்குத் துரோகம் செய்யத்தானா?..." என்று சோகத்தோடு சொல்லிக்கொண்டு வந்தவள், பேச்சை நிறுத்திவிட்டு, உரக்கச் சிரித்தாள்!

அத்தான்! இவள் யார் தெரியுமா? திருமேனி......இவ்வளவையும் சொல்லிவிட்டு நான் கண்கலங்கி, குரல் தேம்பி நிற்கும்போது, 'கண்ணே, நான் சொல்லியது அவ்வளவும் கனவு! நிலவினிலே வந்தவள் வேறு யாருமில்லை, நீயேதான்!' என்பீர்! எனக்குத் தெரியாதா என்ன? பதிலுக்குப் பதில் ஏமாற்றப் பார்த்திர்! அதுதான் முடியாது அத்தான், முடியாது!' என்று சொல்லிக்கொண்டே அவன் மார்பில் தன் முதுகைச் சாய்த்து, கழுத்தைக் கைகளால் வளைத்துக்கொண்டாள். முகத்தை மேலே உயர்த்தி, மோகனப் புன்னகை செய்தாள்.

குனிந்து அவன் முத்தம் தரப் போகும்போது, பாறையைவிட்டுக்

(12-பக்கம் பார்க்க)

# பண்பறிந்தாற்றுக!

“இன்னு செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயஞ் செய்து விடல்!” என்றார் வள்ளுவப் பெருந்தகை. அரபு நாடுகள் ஒருமித்து ஒதுக்கி வைத்துள்ள நாடான இஸ்ரேல், தன்னை ஒரு நாடென இந்தியா ஒப்புக்கொள்ளாவிட்டாலும், அரபு நாடுகளின் மீசைத் துடிப்புக்கு எதற்காக வீணில் ஆளாகவேண்டும் என்ற எண்ணத்தில் இந்தியா, இஸ்ரேலை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், மூவர் மாநாட்டின் முக்கூட்டு அறிக்கையில் ‘இஸ்ரேல்’ என்று கூட குறிப்பிட விரும்பாமல் ‘பாலஸ்தீன்’—என்றே குறிப்பிட்டு, ‘எதையோ’ சொல்லிவைத்தாலும் கூட, ஒரு ‘விவகாரம்’ என்று வந்துவிட்டபோது, ‘நன்னயஞ் செய்யக்’ கருதிய ‘இஸ்ரேல்’, ஐ. நா.-வில் அண்மையில் நடைபெற்று முடிந்த பந்தோபஸ்து சபைத் தேர்தலில் இந்தியாவை ஆதரித்து வாக்களித்திருக்கிறது!

கடந்த பதினாறு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியா, ஐ. நா. பாதுகாப்புக் குழுவில் மீண்டும் இடம் பெற்றுள்ளது. இந்த இடத்தைப் பெறுவதில் இந்தியா பல எதிர்ப்புக்களையும், சதிகளையும் கடந்து எதிர்நீந்திவந்து வெற்றிவாகை சூடி இருக்கிறது.

ஆசிய நாடுகளில் எந்த ஒன்றும்’ அரபு நாடுகளை மதித்து, அவற்றின் ‘லீகை’ ஒப்புக்கொண்டு அரசியல் அந்தஸ்து நல்கி, தன் நாட்டில் அது ஒரு தூதராலயம் வைத்துக் கொள்ளவல்லை. ஆனால் இந்தியா மட்டும் அரபு லீகை ஏற்று, அதற்குத் தலைநகரத்தில் ஒரு தூதராலயமும் தந்திருக்கிறது.

இந்தியாவுக்கு நன்றி காட்ட வேண்டிய கடமை ‘அரபு லீக்’கில் இடம் பெற்றுள்ள நாடுகளுக்கு உண்டு; ஆனால், அவற்றுள் ஒன்றான சிரியா நாடு, இந்தியாவிற்குப் போட்டியாக, பாதுகாப்புக் குழுத் தேர்வுக்கு நின்றிருக்கிறதென்றால், இது பச்சைத் துரோகமே யாகும்.

ஆனால் சிரியா, எவ்வளவோ வேண்டுகோளுக்குப்பிறகும் போட்டியில்; உறுதியாக நின்றதற்குப் பாகிஸ்தான் உள்ளிட்ட சில நாடுகளின் தூண்டுதல்தான் காரணம் என்றும் கூறப்பட்டுள்ளது.

அரபு நாடுகளின் கூட்டத்தில் பதின்மூன்று வரையில் இந்தியாவுக்கு எதிராகவும், சிரியாவை ஆதரித்தும் வாக்களித்திருக்கின்றன.

இந்நிலையில்தான் இந்தியாவால் ஏற்றுக்கொள்ளப்படாத இஸ்ரேல், இந்தியாவை ஆதரித்து வாக்களித்திருக்கிறது.

‘அரசு’ இயலைப் பொறுத்த மட்டில் எந்த ஒரு நாடும், என்றென்றும் நண்பனாகவோ, எதிரியாகவோ இருப்பதில்லை என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டுதான் இந்நிகழ்ச்சி.

பந்தோபஸ்து குழுவில், போட்டி—பொறாமை—சூழ்ச்சி இவைகளுக்குப் பிறகு வெற்றிகண்ட இந்தியா எடுத்த எடுப்பில் ‘உலக சமாதானத்திற்குப் பாடுபடும்’ என்று அறிவித்திருக்கிறது.

“உலக சமாதானத்திற்குப் பாடுபடுதல்’ என்ற சொற்றொடர், உலக நாடுகள் அனைத்தும் ஒரு பொதுவான தத்துவத்தை நிலைநாட்டல் என்ற அடிப்படையில், சர்வ சாதாரணமாக எடுத்துக் காட்டப்படுவதாகும். இதே கருத்தில் இந்தியாவும் சொல்லி இருந்தால் இழப்பேதும் இல்லை.

உலக நாடுகளில் மிகப்பெரும் பாலானவை, இன்று ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான ‘விவகாரங்களோடு’ பின்னப்பட்டு, ஒவ்வொருவகை சிக்கலில் சிக்குண்டு, செய்தி இதழ்களின் கவனத்துக்கும் பிற நாடுகளின் ‘கண்வைப்பு’க்கும் உரித்தாகியுள்ள வேளை இது.

உலகப் பெரும் வல்லரசுகள் என்று கூறிக்கொண்டிருப்பனவற்றுள்ளேகூட பல ‘பிணக்கு’கள் பின்னிக்கொண்டுள்ளன.

“உலக சமாதானத்தைக் காக்க வேண்டும்” — என்ற பெருநோக்கில் அன்று கொரியா விவகாரத்தில் அமெரிக்காவின் ஆத்திரத்தை நேரு பெற்றார். அவருககுப்பின் ‘வியட்நாம்’ விவகாரத்தில் லால்பகதூர் சாஸ்திரி அடைந்தார். அவருக்குப் பின் இந்திரா அம்மையார் பிரதமராகியுள்ள இந்த வேளையில்—உலகப் பிணக்குகள் பெருகிப் பல்கியுள்ளன.

உலக சமாதானம் காக்கப்பட வேண்டியதுதான். ஆனால் உலக நாடுகள் ஒவ்வொன்றும் ‘ஏதோ ஒரு’ இலட்சியத்தினடிப்படையிலேயே ‘ஏதோ ஒரு’ விவகாரத்தில் இயங்கிக்கொண்டிருக்கும்போது—சமாதானப் பணியில், சற்று முன் எச்சரிக்கையோடு இந்தியா இருப்பதுதான், நாட்டின் பொது நலனுக்கு உகந்ததாயிருக்கும்.

“அனைத்துலக ஜோதி’யாக வேண்டும் என்ற பேராசைப் பிணியில் சிக்குண்டு பந்தோபஸ்துக் குழுவை சாக்கு வைத்துக்கொண்டு உலகத்துக்குப் “புத்திமதி”கள் சொல்லத் தொடங்கினால், பல நாடுகளின் தயவுக்கு இந்தியாவின் எதிர்காலத்தை ஈடுபடுத்திவிட்ட பாவத்திற்குக் கழுவாய் தேடிக் கொள்ளவேண்டிய நிலைமை கட்டாயமாகிவிடும்.

நன்றி காட்டுவதற்குக்கூட இலக்கணம் வகுத்த வள்ளுவன்,

“இக்காரணம்பற்றி, இன்னாருக்கு உதவி செய்யலாம்—கேடில்லை; இன்னாருக்கு உதவி செய்தால், செய்ந்நன்றி கொல்லப்பட்டு, கேட்டிற்கிலக்காக நேரும் என்பதை உணர்ந்து, அவரவர் பண்பறிந்து உதவி செய்யவேண்டும்”

என்று பொருள்படும்படி—

‘நன்றாற்றலுள்ளும் தவறுண்டு;
அவரவர் பண்பறிந்தாற்றாக் கடை’

என்று கூறியுள்ள குறட்பாவை இந்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டியது குறள் கற்ற தமிழர் கடன்!

-திருவாரூர் முத்துராமன்.

---

11-ம் பக்கத் தொடர்ச்சி

கீழே குதித்துச் சிறிது தள்ளி நின்றாள்.

குன்றின்மீது யாரோ பேசிக்கொண்டு ஏறி வருவதைக் கண்டதும், திருமேனி அப்படியே அசைவற்று நின்றுவிட்டாள்.

“என்ன திருமேனி?” என்று கேட்டுக்கொண்டே அருகில் வந்தவனுக்குத்திருமேனிபேசமுடியாமல் திணறிக்கொண்டே ‘அதோ!’ என்று கீழே காட்டினாள்.

கையில் வாள், வேல் ஏந்தி வருபவர்களைக்கண்டு திடுக்கிட்ட குலசேகரன், ‘ஆ! மோசம்போனேனே!’ என்று தனக்குத்தானே முணுமுணுத்துக்கொண்டான்!

[வளரும்]

# தியாகிகள் இல்லை; தீயோர் புகுந்தனர்!

8-ம் பக்கத் தொடர்ச்சி

காங்கிரசுக் கட்சியைச் சுற்றிவளர்ந்திருந்த ஒரு எழுச்சியூட்டும் வரலாறு, அந்த அளவுக்கு வலிவளித்தது. முதல் முறை! ஆனால் ஒரே ஒரு முறைதான்!

அடுத்த முறையே, காங்கிரஸ், யாரை நிறுத்தினாலும் என்ற 'பர்சை விட்டுவிட்டது.

காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பெருமையைப் பற்றிக் கூறியதுடன், தேர்தலுக்கு நிற்பவரின் நாட்டுப் பற்று, தொண்டு, தியாகம், அறிவாற்றல் ஆகியவை பற்றியே அதிகமாக, விளக்கமாகப் பேசித்தான் ஓட்டுக் கேட்க முடிந்தது.

அந்த அளவு மக்கள் மத்தியில் ஓர்விழிப்புணர்ச்சி ஏற்பட்டு விட்டிருக்கிறது; இடையில்.

பிறகோ, காங்கிரசுக் கட்சியின் பேரால் தியாகிகள், அறப்போர் வீரர்கள், அஞ்சா நெஞ்சினர், அண்ணல் காந்தியாரின் வழி நின்றிடுவார் என்போர்களைத் தேர்தலிலே நிற்க வைக்கவில்லை.

அவர்களின் தொகை குறைந்துகொண்டு வந்ததும்,

அவர்களிலே பலர், காங்கிரசாட்சியின் போக்கு கண்டு மனம் வெதும்பி, கட்சியை விட்டு வெளியேறி விட்டதும்,

இதற்கான காரணங்கள் என்று கொள்ளலாம்.

தியாகிகளுக்குப் பதிலாக, கனதனவான்களைத் தேடிப் பிடித்தனர்.

கட்சியின் சாதனைகள் பற்றிப் பெருமிதத்துடன் பேசி ஓட்டுக்கேட்பதற்குப்பதிலாக, வேட்பாளர்களின் நாட்டுப் பற்று, தியாக உள்ளம், மக்கள் தொடர்பு, ஆகியவை குறித்து எடுத்துக் கூறி ஓட்டுக் கேட்பதற்குப் பதிலாக,

இவர் இந்தப் பகுதியில் மிக்கசெல்வாக்குள்ளவர்.

பெரிய நிலச்சுவான்தாரர்,

கோயில் தர்மகர்த்தா.

சத்திரம் சாவடி கட்டியவர்.

ஆயிரம் பேர்களுக்குப் பிழைப்பு தருகிறார்; தமது தொழிலகங்களில்.

இவருடைய பேச்சைத் தட்டி நடந்திடுவோர் எவரும் இந்தப் பக்கத்திலே கிடையாது.

இவர்தான், இந்த ஜாதித் தலைவர்—குலத்தலைவர்—பெரிய தனக்காரர்.

இவர் பாளையக்காரர் பரம்பரை; ஆள் அம்பு இவரிடம் ஏராளம்.

என்ற இவ்விதமான நாமாவளி பாடி ஓட்டுக் கேட்டிடலாயினர்.

காங்கிரசுக் கட்சி அதற்குள் அந்த விதமாக, பெரிய புள்ளிகளிடம் அடைக்கலம் புகுந்துவிட்டது.

தம்பி! கோவை சுற்றுப் பயணத்தின்போது கேள்விப்பட்டேன். இப்போதைய அமைச்சர் இருக்கிறாரே, பழையகோட்டை பட்டக்காரர்—காங்கிரசல்லவா அவர்—அவருடைய,

தகப்பனார் காங்கிரசை எதிர்த்துத் தேர்தலிலே நின்று தமது செல்வம் செல்வாக்கு, ஆள் கட்டு எல்லா வற்றையும் காட்டியும், குட்டபாளையம் பெரியசாமி என்ற காங்கிஸ்காரரால் தோற்கடிக்கப்பட்டார்; பெரியசாமி என்பவர் சிறு நிலச்சுவான்தாரர்தானும்.

காங்கிரஸ் என்ற அமைப்புக்கு அன்று இருந்து வந்த அப்பழுக்கற்ற செல்வாக்கைக் காட்டுகிறது அந்த நிகழ்ச்சி.

இன்று அவர் திருக் குமாரர், காங்கிரசின் மீது பழி தீர்த்துக் கொண்டுவிட்டார்!

எந்தக் காங்கிரஸ் என் தகப்பனாரைத் தோற்கடித்ததோ அந்தக் காங்கிரஸ் இன்று என் சரண்டனை தாழ்வாரத்தில்! அதன் தலைவர்கள், என் எதிரில், சிரித்த முகத்துடன்! அதன் தொண்டர்கள், நான் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வர!

இவ்வளவு எளிதாக இந்தக் காங்கிரசை அடிமைப்படுத்த முடிகிறபோது, ஏனோ அப்பா, அதனை வீணாக எதிர்த்துத் தொல்லைப்பட்டார்!

தொட்டால் துவண்டிடும் நிலையில் காங்கிரஸ் இருக்கும்போது, தாக்கிவர ஆளா அனுப்பவேண்டும்!!

என்றெல்லாம் கேட்டு கெக்கலி செய்திடாமலா இருந்திடுவார், மன்றாடியார்! தம்பி! இடையிலே காங்கிரசுக் கட்சி அதன் இயல்பான மதிப்பையும் செல்வாக்கையும் இழந்து விட்டதாலே, இத்தகைய பெரு நில முதலாளிகளின் அரவணைப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டி நேரிட்டுவிட்டது.

மற்றோர் விந்தை இதிலே என்னவென்றால், பழைய, பழைய கோட்டை பட்டக்காரரைத் தோற்கடிக்கும் அளவு வலிவு பெற்றிருந்த பெரியசாமி என்பவர், காங்கிரஸ் தனது செல்வாக்கு சிதைக்கப்பட்டு, மக்களுடைய எதிர்ப்புக்கும் வெறுப்புக்கும் இலக்காகி விட்ட பிறகு, அந்த காங்கிரசின் சார்பிலே நின்று, சோஷியலிஸ்டு நல்ல சிவத்திடம் தோற்றுப் போனார்.

ஒருபுறத்தில் காங்கிரசின் செல்வாக்கு, அதன் வேட்பாளருக்கு, வெற்றியைத் தேடிக் கொடுத்திட இயலாத சூழ்நிலையைக் காலம் ஏற்படுத்திவிட்டது.

மற்றோர் புறத்திலேயோ, தந்தையாரைத் தோற்கடித்த காங்கிரசை, திருமகனார்

# கட்சி வாழ்ந்திட காட்டாட்சி தர்பாரா?

சிறைப்பிடித்து வந்து அரண்மனையில் அடைத்துப் போட்டிடும் சூழ்நிலையும் வடிவமெடுத்து விட்டிருக்கிறது.

இந்தப் புதிய வலிவு மட்டுமே, தம்பி! இன்று காங்கிரசுக்கு நம்பிக்கை ஊட்டுகிறது. இந்தப் புதிய வலிவு,

பணம்

ஜாதிச் செல்வாக்கு

துணிந்த நடவடிக்கை

என்பவைகளைக் கொண்டது.

தூக்கிவாடா அவனை! கட்டிவைத்து அடியுங்களடா அவனை! கொளுத்து அவன் வீட்டை! கொன்று போடு அவன் மகனை! விரட்டு அந்தக் குடும்பத்தை!— என்றெல்லாம் காட்டாட்சி நடாத்தி வந்தவர்கள் இன்று காங்கிரசிலே இடம் பிடித்துக் கொண்டுவிட்டதால்,

ஓட்டு வேட்டையில் காட்டு முறையைப் புகுத்திடும் நிலை உருவாகிவிட்டிருக்கிறது.

இந்தத் தைரியத்தால் ஏற்பட்ட நம்பிக்கைத் தவிர, இன்றைய காங்கிரசுக்கு, தேர்தல் வெற்றியிலே நம்பிக்கை கொள்ள வேறு என்ன காரணம் இருக்கிறது.

அரிசிக்காக மக்கள் ஆலாய்ப் பறக்கிறார்கள்.

அகவிலை காரணமாக நாட்டவர் அவதிப்படுகிறார்கள்.

வேலை கிடைக்காமல் வேதனைப்படுகிறார்கள்.

வரிச்சுமையால் வாழ்வு முறிந்த நிலை பெறுகிறார்கள்.

நித்த நித்தம் துப்பாக்கிச் சத்தம்! பிணம்!

நாட்டின்மீது உள்ள கடன் ஏறியபடி இருக்கிறது.

நாணயத்தின் மதிப்பே கெட்டுப் போய் விட்டிருக்கிறது.

ஏற்றுமதி வளரவில்லை; இறக்குமதியைக் குறைக்க முடியவில்லை.

உணவு அமைச்சர் இங்கு இருக்கிறார்; உணவோ அமெரிக்காவில் இருக்கிறது.

இவை, வெற்றி பெற்றிடுவதற்கான காரணங்களா! நம்பிக்கை யூட்டும் குறிகளா!

நேர்மையிலே நாட்டம் கொண்டிடும் ஒரு கட்சிக்கு, இந்த நிலைமைகளைக் காணும்போது நடுக்கமெடுக்கும். ஆனால் பார்க்கிறோமே, தம்பி! அவர்கள், இவ்வளவு எரிச்சலையும் ஏமாற்றத்தையும் மக்கள் மனதிலே மூட்டிவிட்ட பிறகும், நாங்கள்தான் வெற்றி பெறப் போகிறோம் என்று எக்காளமிட்டு வருவதனை!

எதனால் பிறந்தது இந்தத் துணிவு.

சாதனைகளைக் காட்டி ஓட்டு வாங்கிட முடியாது என்றாலும், நோட்டுகளைக் காட்டி ஓட்டுகளை வாங்கிடலாம் என்ற துணிவுதான், தம்பி! இன்று அவர்களுக்கு உள்ள நம்பிக்கை!

நாட்டின் பல பகுதிகளில் இன்னும் இருந்து வரும் காட்டாட்சி நடத்திடுவோர், தொழிலதிபர்களாக இருப்பதால், நிலச்சுவான்தாரராக இருப்பதால், ஜாதித் தலைவராக இருப்பதால், கிடைத்திடும் வலிவினைக் காட்டி, மக்களை ஒடுக்கிடும் வித்தையில் கைதேர்ந்தவர்கள், காங்கிரசில் இருப்பதால், அவர்கள் இந்தத் தேர்தலிலே எல்லா முறைகளையும் கையாண்டு, வெற்றி பெற்றுத் தருவர் என்ற நம்பிக்கை.

ஆகவே தம்பி! இந்தத் தேர்தலிலே நாம் ஈடுபடுவது, வெறும் கட்சிக் கண்ணோட்டத்துடன் என்றுகூடக் கூறுவதற்கில்லை. அரசியலில், அதிலும் மக்களாட்சி முறையில் புகுத்தப்பட்டுள்ள காட்டாட்சி முறையை எதிர்த்து ஒழித்திடும் ஒரு தூய தொண்டிலே நம்மை ஈடுபடுத்திக்கொள்கிறோம் என்று பொருள்.

காட்டாட்சி நடாத்தி வந்தோரின் கசையடிக்குத் தமது தசையைக் கொடுத்த உழைப்பாளிகள் பலப்பலர்!

காட்டாட்சியினரால் உருக்குலைக்கப்பட்ட உத்தமர்கள் ஏராளம்!

வீடு இழந்தவர்கள், விழி இழந்தவர்கள், வாழ்வு இழந்தவர்கள், தன்மானமே கூட அழிக்கப்பட்டுவிட்டவர்கள் ஏராளம்.

அவர்களெல்லாம் கொட்டிய குருதி, வடித்த கண்ணீர் எழுப்பிய பெருமூச்சு, காலவேகமாக, காட்டாட்சியினரின் பிடியைத் தளர்த்திற்று.

சிற்றரசர்கள்

ஜெமீன்தாரர்கள்

மிட்டா மிராசுகள்

போன்றோரின் ஆர்ப்பரிப்பும் அட்டகாசமும் ஆதிக்கமும், குறைக்கப்பட்டது; அவர்களின் கெடுமதியும் கொடு நினைப்பும் புற்றுக்குள் அரவமென்று ஒடுங்கிற்று. ஏழை விழித்துக்கொண்டான்! பாட்டாளி கேள்விகேட்கிறான்! அழுத கண்களிலே அனல் கிளம்புகிறது! கூப்பிய கரத்தினர், கொடுவாள் தூக்கும் நிலை வந்திடுவது தெரிகிறது! காலம் மாறிவிட்டது! இனி நமது காட்டாட்சி நடவாது!!—என்று எண்ணி, அத்தகைய ஆதிக்கக்காரர்கள் தமது 'தர்பாரை' நிறுத்திக் கொள்ளத் தலைப்பட்டனர்.

அந்த நேரமாகப் பார்த்துத்தான் வெறும் கட்சி ஆதிக்கத்துக்காகவேண்டி அந்த காட்டாட்சி நடத்திடுவோரை, காங்கிரஸ் தலைவர்கள் அழைத்துவந்து அவர்களிடம் அரசியலை ஒப்படைத்திருக்கிறார்கள்.

# அடக்கி ஆளுவாய்! அரும்பலன் கிட்டும்!

முடிந்துவிட்டது நமது ஆதிக்கம் என்றெண்ணி மூலைக்குச் சென்றுவிட்டவர்களுக்கு, காங்கிரசின் மூலவர்கள் முதல் தாம்பூலம் கொடுத்து, கூடத்தில் கொலு இருக்கச் சொல்லுகிறார்கள்.

கொடுமை! கொடுமை! அது மட்டுமல்ல தம்பி! இது எத்தகைய எதிர்காலத்தை உருவாக்கும் என்று உணர்ந்திடக்கூடிய எவரும் இதனை, மடைமை! மடைமை! என்றே கூறுவர்.

முதலாளிகளையே, வேட்பாளர்களாக நிறுத்த முனைகிறார்கள், இது கட்சிக்கோ, நாட்டுக்கோ, நாட்டுக்குத் தேவையான சோஷியலிசத்துக்கோ நல்லது அல்ல என்று மனம் குமுறி, காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் பலர், டில்லிக் கூட்டமொன்றில் பேசியது பற்றி முன்பு குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது மாளவியா எனும் மற்றோர் காங்கிரஸ் தலைவரும், மாரடித்து அழுகிறார், இப்படியா முதலாளிகளுக்கு இடம் கொடுப்பது; காங்கிரசுக் கட்சி அவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறதே; நாடு கெடுமே; சோஷியலிசத் திட்டம் பாழ்படுமே என்றெல்லாம்.

கேட்பவர்கள் யார்! அவர்கள் வெகு தூரம் சென்றுவிட்டார்கள்; இனித் திரும்பி வருவது இயலாத காரியம். அவர்கள் மிக இறுக்கமாகப் பிணைத்துக் கொண்டுவிட்டனர்; இனி அவர்களைப் பிரித்துவிடுவது முடியாத காரியம்.

தம்பி! வளர்ந்து விட்டிருக்கும் எதிர்ப்பை அழித்தொழிக்க, காங்கிரசுக்கு, தனக்குள்ள வலிவு போதுமானதாக இல்லை! ஆகவே சீமான்களின் வலிவைத் துணையாகப் பெறுகிறது. சீமான்களைக் கொண்டு, இந்த எதிர்ப்பை முறியடிக்கத் திட்டமிடுகிறது. மக்களின் உரிமைக் குரலை அடக்கிட மமதையாளர்களின் துணையைத்தேடிப்பெறுகிறது. அந்த மமதையாளர்கள்

"கைத் திறனும் வாய்த் திறனும் கொண்ட மக்கள் கண்மூடி மக்களது உடைமை எல்லாம் கொத்திக்கொண்டு ஏப்பம் விட்டவர்"

என்பதனை அறிந்து, அவர்களை ஏவிவிட்டு ஜனநாயகத்தைச் சிதைத்திடத் துணிந்துவிட்டனர்.

ஆகவே இம்முறை நாம் தேர்தலிலே ஈடுபடுவது, கட்சியின் வெற்றிக்காக என்ற குறுகிய நோக்குடன் அல்ல; அரசியல் ஆதிக்கத்துக்காக அமைக்கப்பட்டுள்ள

கூட்டுச் சதியை முறியடிக்க

என்பதனை உணர்ந்திட வேண்டும்.

ஆகவே நமது பணியிலே தம்பி! உணர்ச்சி பக்குவப்படுத்தப் பட்டதாகி, பயன்படுத்தப்பட வேண்டும்.

மிகப் பெரிய காரியத்தை மேற்கொண்டுவிட்டோம்.

மிகப் பயங்கரமான ஒரு வளையத்தை உடைத்துப் போட முனைந்திருக்கிறோம்.

மிகக் கேவலமான ஒரு கூட்டுச் சதியை உடைத்தெறியும் காரியத்தை மேற்கொண்டுவிட்டிருக்கிறோம்.

இதற்குத் தேவைப்படும் ஆற்றலை, நாம் நமது உணர்ச்சி மூலம் பெறுகிறோம்.

பெற்றுள்ள உணர்ச்சி, என் உள்ளத்திலே தளராத நம்பிக்கையைத் தந்துளது.

திரு வி. கலியாணசுந்தரனாரின் கருத்தினை, இதுபோது கண்டேன்; நாம் மேற்கொண்டுள்ள பணிக்கு மிக மிகத் தேவைப்படும் அறிஉரை அஃது என்பதனால் அதனைத் துவக்கத்தில் அளித்துள்ளேன்.

உணர்ச்சி ஒரு செல்வம்.

அதனை அடக்கி ஆண்டிடின் பலன் கிடைத்திடும்.

அண்ணன்,

அண்ணாதுரை

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

இந்தியத் துணைக்கண்டத்து மொத்த மாநிலங்களின் மக்களும் பல்வேறுபட்ட காரணங்களினால் மனங் குமுறிக் கிடக்கிறார்கள்.

உணவு, உடை, உறையுள் பெறவும் கூட போராடித் தீரவேண்டிய கட்டத்தை நாடு எட்டிப் பிடித்திருக்கிறது என்று எண்ணிப்பார்க்கிறபோது நெஞ்சம் விம்மத்தான் செய்கிறது.

மத்திய அரசிலும், பல மாநில அரசுகளிலும் இதுவரை எத்தனையோமுறை இலாகாக்கள் மாற்றப்பட்டுள்ளன—பற்பல காரணங்களுக்காக! என்றாலும் நாட்டின் இன்னலும், இழிவும் நீங்கிய பாடில்லை— இலாகா மாற்றங்கள் காரணமாக!

நிர்வாக வசதி, ஒழுங்கு காரணமாகக்கூட சில வேளைகளில் இத்தகு மாற்றங்கள் நிகழ்வதுண்டு என்றாலும், பல்வேறு சமயங்களில், குற்றச் சாட்டுக்களின் அடியாகவே ஏற்பட்டிருக்கிறது என்பதை மக்கள் அறிவார்கள்!

எனவே, இலாகா மாற்றங்களால் இதுவரையில் இடர் களையப்படாதது போலவே, இனியும் நாட்டு மக்களுக்கு 'விடிவு' ஏற்பட்டுவிடப் போவதில்லை.

அமைச்சர்களின் நாற்காலி மாறிப் பயனில்லை; நாட்டாட்சி மாறியாகவேண்டும்! அதில்தான் வாழ்வும், வளமும் இருக்கிறதென்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்!

# இலண்டன் பயணம்?

பலமுறை தள்ளிவைக்கப்பட்ட பாகிஸ்தான் அதிபரின் இலண்டன் பயணம் இந்த வியாழக்கிழமையன்று துவங்கியிருக்கிறது. பதினேரு நாட்கள் இங்கிலாந்தில் தங்க இருக்கும் அயூப்கானின் அரசியல் சுற்றுப்பயணம் உற்றுக் கவனிக்கவேண்டிய உலக நிகழ்ச்சியாக இருக்கும் என்பது சந்தேகமில்லை.

கொந்தளிக்கும் பல உள்நாட்டு–வெளிவிவகார நிலைமைகளுக்கிடையிலும் எரால்டு வில்சன் அயூப்கானுக்காக இவ்வளவு நாட்கள் ஒதுக்கியிருப்பது அரசியல்முக்கியத்துவம் பெற்ற ஒரு நிகழ்ச்சியாகும்.

இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் பாகிஸ்தான் ஒரு காமன்வெல்த் நாடு மட்டுமல்ல; நேட்டோ, சீட்டோ, செண்டோ போன்ற இராணுவ ஒப்பந்தங்களில் தொடர்புடைய நாடு என்ற அடிப்படையில் நெருக்கம் இன்னும் சற்று அதிகமாகப் பெற்றிருக்கிறது.

ஏறக்குறைய, இந்தியாவுடன் இலண்டன் கொண்டிருக்கும் தொடர்புகள் காமன்வெல்த் உறவுமுறை என்ற ஒரே அடிப்படையில் மட்டும் அமைந்ததாகும்.

ஆனால் பாகிஸ்தான் இங்கிலாந்துடன் பெற்றுள்ள அரசியல் தோழமை இன்னும் சற்று அதிகத் தொடர்புகளை உடையது. ராவல்பிண்டியின் இந்திய எல்லை ஆக்கிரமிப்பு எந்த வகையிலும் இங்கிலாந்துக்கு வெறுப்பையோ வேதனையையோ தோற்றுவிக்கவில்லை. சீனவுடன் அயூப்கான் கொண்டுள்ள தோழமை வில்சனுக்கு எவ்வித கோபத்தையும் கொடுக்கவில்லை. ஆரம்ப முதல் பணமும் பொருளும் கொடுத்துவந்துகொண்டிருக்கும் அமெரிக்காவுடன் பாகிஸ்தான் சமீபகாலமாகக் கொண்டுள்ள பறைமுக கசப்பு நிலைமைகள்கூட இங்கிலாந்துக்குக் கசப்பினை ஏற்படுத்தவில்லை.

'நம்மிடமிருந்து பாகிஸ்தான் நழுவாமல் பார்த்துக்கொள்வோம்; பாகிஸ்தானுக்கும் நமக்கும் பகைமை எழாமல் பார்த்துக்கொள்வோம்' என்பதில்தான் இங்கிலாந்து அக்கறைகொண்டுள்ளது.

—காமன்வெல்த் உறவு முறைகளுக்கு மதிப்பு அளிக்கும் இந்திய அரசு இந்தப் பின்னணியை ஊன்றிக் கவனிக்கவேண்டும்.

அயல்விவகார அமைச்சருடன் இங்கிலாந்து சென்றிருக்கும் அயூப்கான் 'இந்தியா' என்ற அபாயத்தைக் காட்டி இலண்டனிலிருந்து இன்னும் ஏராளமான அளவுக்கு ஆயுத உதவி கேட்பார் என்று தெரிகிறது. குறிப்பாக பாகிஸ்தானின் கடற்படைக்கு வேண்டிய இராணுவ மட்ட உதவிகளை பிரிட்டன் இம்முறை அளிக்க உறுதியோ ஒப்பந்தமோ ஏற்படுத்திக்கொள்ளும் என்று நம்பப்படுகிறது.

இப்போது இந்தியாவில் உள்ள ஒவ்வொரு தனி மனிதனும் ஒரு ஷில்லிங் இங்கிலாந்திடமிருந்து உதவியோ, கடனே பெறுகிறான். ஆனால் பாகிஸ்தான் பெறும் உதவியோ இரண்டு ஷில்லிங் விகிதாசாரம். அதாவது இங்கிலாந்திலிருந்து இந்தியா பெறும் உதவிகளைப்போல் பாகிஸ்தான் இரண்டு மடங்கு பெறுகிறது. மற்றைய மேற்கு நாடுகளிலிருந்து பாகிஸ்தான் பெறும் அந்நிய இராணுவ உதவிகள் இதைவிட இன்னும் அதிகமான தொகையாகும்.

கொடுக்கும் நாடுகள் எதை நினைத்துக் கொண்டு இருக்கின்றனவோ; கேட்கும் பாகிஸ்தான் இந்தியாவைக் காட்டித்தான் இராணுவ பொருளாதார உதவிகளைக் கேட்கிறது. இதன் ஒரு கட்டமாகத்தான் இலண்டனில் பயணம் மேற்கொண்டிருக்கிறார் அயூப்கான்.

பாகிஸ்தானிடம் நெருக்கம் கொள்வதன் மூலம் மேற்கு ஆசியாவில் குறிப்பாக அராபிய நாடுகளுடன் இழந்துவிட்ட தனது அரசுச் செல்வாக்கினையும் உறவுகளையும் புதுப்பித்துக் கொள்வதற்காகவும் இங்கிலாந்து, ராவல்பிண்டி அரசுடன் தோழமையை அவ்வப்போது சிறிது அதிகமாகவே மேற்கொள்கிறது.

காமன்வெல்த்தின் முக்கிய உறுப்பு நாடு என்ற முறையில் என்ன இருந்தாலும் இங்கிலாந்து இந்தியாவை சிறப்பாகவே தனித்துக் கருதும் என்ற எண்ணத்தில் சென்று கொண்டிருப்பதில் பயனில்லை.




## அமைதிக் குழு?

பொருத்தமில்லாத பெயரைச் சூட்டிக் கொண்டிருப்பதால் அமெரிக்காவின் 'அமைக் குழு' 'முன்னணி'க்கு வந்துகொண்டிருக்கிறது. அமெரிக்காவின் இளைஞர்கள் அங்கம் வகிக்கும் இந்த அமைப்பு பெரும்பகுதி நாடுகளில் பெற்று வருவது எதிர்ப்பு; அங்கே இவைகள் உருவாக்கி வருவது குழப்பம்.

இங்கே கூட பல மாநிலங்கள் அமெரிக்க அமைதிக் குழுவைப் பற்றிப் புகார்கள் தெரிவித்திருக்கின்றன மத்திய அரசிடம்.

'அனுபவமேஇல்லாத நிபுணர்கள்' அரசியலில் குறுக்கிடும் உறுப்பினர்கள்; மக்களை மதிக்காத தொண்டர்கள்; இப்படிப் பல புகார்களை இராஜஸ்தான், பீகார், மைசூர் மாநில அரசுகள் புதுடில்லிக்குத் தெரிவித்துள்ளன. பல்வேறு வகைப்பட்ட குற்றச் சாட்டுகளின் காரணமாகத் திட்ட அமைச்சரவையிடமிருந்த அமைதிக்குழுபற்றிய அலுவல்களை இந்திய அரசு நிதியமைச்சரவைக்கு மாற்றியுள்ளது.

இதேபோல் ஆப்பிரிக்காவிலுள்ள கினியாவும் 'அமைதிக் குழு'வை நாட்டைவிட்டே அப்புறப்படுத்தியிருக்கிறது. இதன் காரணமாக 64 அமைதிக் குழு உறுப்பினர்கள் எட்டு நாள் தவணைக்குள் கினியாவைவிட்டு வெளியேறியிருக்கின்றனர்.

உலகின் பின்தங்கிய — முன்னேறும் நாடுகளிடையே சென்று அமைதி வழியில் ஆக்கப்பணிகளுக்கு யோசனைகளையும் உழைப்பையும் தந்துதவுதற்காக காலஞ்சென்ற கென்னடியால் தவக்கப்பட்ட இந்த முயற்சி இப்படி அரசியல் குற்றச்சாட்டுக்களுக்குஆளாகி வருவது வருந்தத்தக்க நிலைமைகளாகும்.

அமெரிக்க அரசு 'அமைதிக்குழு'வைப்பற்றி மீண்டும் தீவிரமாகச் சிந்திக்கவேண்டும்.

—எஸ். ஆர்.

சின்னகாஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். வி. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.